https://tamileelamarchive.com/


# SOLT

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் SOLT

விடுதலைப் புலிகள் தமிழீழம் Liberation Tigers Of TAMIL EELAM

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

5 நவம்பர் 1985 வேட்டு 5 அன்பளிப்பு 50


# ஈழதமிழ்ப் பெண்களும் துப்பாக்கி ஏந்தும் காலம் நெருங்கிவிட்டது!

இலங்கை சிங்கள ராணுவத்தை திணறடித்துச் செயலற்ற நிலையில் ஆக்கி வைத்துள்ள விடுதலைப் புலிகளின் கொரில்லா யுத்தம் இருபதாம் நூற்றுண்டின் ஒரு அதிசய சாதனை என்று சொல்லத்தக்கது.

நாற்பதாயிரம் பேர்களைக் கொண்ட சிங்கள ராணுவத்தை ஐந்து பேரைக் கொண்டு தொடங்கிய விடுதலைப் புலிப் படை எதிர்த்து நிற்கிறது. அது மட்டுமல்ல இன்று வீட்டுக்கு ஒரு இளைஞனை தனக்குரியவனுகக் கொண்டதாக அது வளர்ந்துவிட்டது.

சிங்கள ராணுவத்தினரின் கொடுமைகளையும் விடுதலைப் புலிகளின் உத்வேகத்தையும் பார்த்துப் பார்த்து தமிழ்ப்பெண்களும் ஆயுதம் ஏந்தும் காலம் அங்குநெருங்கிவருகிறது.

வியட்னுமில் நடைபெற்றது போல ஈழத் தமிழனின் சிறு பிள்ளைகளும் கூட தோளில்துப்பாக்கி தாங்கி நிற்க சித்தமாகி விட்டனர்.

சுருக்கமாகச் சொல்வதானுல் இலங்கையும் ஒரு வியட்னுமாகி வருகிறது.

மிகக் குறைந்த எண்ணிக்கையினராக நாற்பது ஐம்பது பேர்களைக் கொண்டகுழுவினராகச் சென்று திடீர் தாக்குதல்களை நடத்தி சிங்கள ராணுவத்தை பலமுறை நிலை குலையச் செய்திருக்கின்றனர். பல முறை நடைபெற்றும் தடுக்க முடியாத காரணத்தால் சிங்கள ராணுவத்தின் மத்தியில் சோர்வும் பீதியும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

இஸ்ரேலிய மொசாத் அதிரடிப் படையிடம் பயிற்சி பெற்றும்கூட ஒரு சிறு குழுவிடம் தாக்குப்பிடிக்கும் மனவலிமை இல்லாததாக ஒரு பெரிய ராணுவம் மாறிவருகிறது. சிங்கள ஆட்சியாளரையும் மட்டுமல்ல. சர்வதேச ராஜதந்திரிகளையும் கூட இது திகைப்பில் ஆழ்த்தி வருகிறது.

எந்த நிலையிலும் ஓடுகிற ராணுவவீரனை விடுதலைப்புலிகள் சுடமாட்டார்கள். துப்பாக்கி ஏந்தி தங்களை எதிர்ப்பவனை மாத்திரமே சுட்டுவீழ்த்துவது என்ற யுத்த தர்மத்தை தமிழினத்தின் உயரிய மனிதப் பண்பையும் அவர்கள் கைவிடுவதில்லை உடலை மட்டுமின்றி மனத்தையும் புல்லரிக்கச் செய்யும் தமிழ் வீரமறவர்களின் இந்தச் சாகசம் விடுதலைப் புலிகளின் வீர



## வெற்றியா ? வீர மரணமா ?

தலைவரின் சிறப்புப் பேட்டி
பேட்டி பக்கம் 9



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



1 ஆம் பக்கத் தொடர்ச்சி

காவியத்தை அழகு படுத்துவதாக உள்ளது.

தற்போது நடைபெறுகிற கொரில்லா யுத்தமானது தமிழ்ப் பகுதிகளில்நிலை கொண்டுள்ளசிங்கள இராணுவ முகாம்களை விரட்டியடிக்க வேண்டும் என்ற முனைப்பைக் கொண்டு நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம், மன்னார், திரிகோணமலை, மட்டக்களப்பு முல்லைத்தீவு அம்பாரை புத்தலம் ஆகிய ஏழு இடங்களில் ஏறத்தாழ ஐம்பது இராணுவ முகாம்களை சிங்கள ராணுவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த ஐம்பது முகாம்களிலும் ஏறத்தாழ பதினைந்தாயிரம்பேருக்கு மேல் சிங்கள ராணுவத்தினர் உள்ளனர். இவர்கள் அனைவரையும் முகாம்களை காலி செய்து ஓடவைக்க வேண்டும் என்பதை தற்போதைய முதல் நிட்டமாகக் கொண்டு விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல்களை கொரில்லா முறையில் நடத்தி வருகின்றனர்.

கொரில்லாப் போர் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தீவிரமடைந்து வந்திருக்கிறது. இதன் காரணமாக தமிழர் பகுதிகளில் சிங்களர் பணியாற்றுகிற நிலை ஏற்பட்டுள்ளது. ராணுவத்திலும் சோர்வும் பீதியும் வளர்ந்து உள்ளூரப் புகைச்சல்களைக் கிளப்பியுள்ளது. இது வளர்ந்துவிடக் கூடாதே என்ற கவலை ஜெயவர்த்தனே அரசை வாட்டி வதைக்கிறது. மற்ற பகுதிகளில் பணியாற்றுகிறவர்களைக் காட்டிலும் தமிழர் பகுதிகளில் பணியாற்றுவோருக்குமாதம்ரூ.1500 கூடுதலாக ஊதியம் வழங்குவதாக அறிவித்தும் யாரும் உடன்படுவதாக இல்லை.

யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்குவதாகஅறிவித்தவுடன் ராணுவ வீரர்களின் பெற்றோர்கள் ராணுவ மந்திரி அதுலத் முதலியின் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர். தங்கள் பிள்ளைகளைத் தமிழர் பகுதிகளுக்கு அனுப்புவதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழர் பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்களர்களும் தங்கள் குடியிருப்புகளைக் காலி செய்து விட்டு தங்கள் பழைய இடங்களைத் தேடிஓடுவதுஅதிகரித்து வருகிறது.



## மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்துக்கிடையே தமிழீழ விடுதலைப் புலி கொரில்லாக்கள்

இதைக்கண்டுஅஞ்சிய புத்த பிட்சுகள் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பார்லிமெண்ட் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கே பாதுகாப்பு இல்லாமற் போய்விட்டதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

### ராணுவத்தில் பீதி

சிங்களர்களின் அவநம்பிக்கை, புத்த பிட்சுகளின் நச்சரிப்புகள் இது ஒரு பக்கம். மறுபக்கத்தில் நிர்வாகச் செலவுகளுக்கும் பற்றாக்குறை. ராணுவச் செலவுகள் அதிகரிப்பு. ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வரும் அந்நியச் செலாவணி போன்ற பல நெருக்கடிகள் ஜெயவர்த்தனே அரசை மூச்சுத்திணறச் செய்து கொண்டிருக்கின்றன.

ஆண்டு, வருமானம் ஏறத்தாழ 2 ஆயிரம் கோடிரூபாய் அதேசமயம் ஆண்டு செலவுக்குத் தேவைப்படுவதோ 4 ஆயிரம் கோடி ரூபாய். பற்றாக்குறை 2 ஆயிரம் கோடி ரூபாயாகிவிட்டது. அன்னியக் கடன்களையும் அன்னிய உதவிகளையும் நம்பியிருக்கிற நிலை; உதவி செய்கிற நாடுகளும்நம்பிக்கை இழந்து வருகின்றன.

### ஓட்டல்கள்

149நவீன ஓட்டல்கள் கட்டப்பட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் மூலம் அந்நியச் செலாவணியைக் கணிசமாகத் தேடித் தந்து கொண்டிருந்தன. அவைகளில் தற்போது 49 தனியாருக்கு விற்கப்பட்டு நூறு மட்டும் உள்ளூர்க்காரர்களுக்கு சொற்ப வாடகைக்கு விடப் பட்டிருக்கின்றன. தேயிலை உற்பத்தியிலும் பெரும் வீழ்ச்சி.

ஆண்டுக்கு ராணுவச் செலவு 33 கோடியிலிருந்து 350 கோடியாகி அதுவும் பற்றாக்குறையாகி 500 கோடியாக உயர்ந்து விட்டது.

ராணுவச் செலவு மட்டும் ஒரு நாளைக்கு ஒரு கோடியே அறுபது லட்ச ரூபாயாகி இலங்கை அரசை ஓட்டாண்டியாக்கி வைத்திருக்கிறது. இதே நிலை நீடித்தால் ஜெயவர்த்தனே அரசு எத்தனை நாளைக்கு என்ற நிலை தான். தற்போதுள்ளது.

இப்படி சிங்களர்தரப்பில் மக்களும் மனம் சலித்து விட்டனர். ராணுவத்திலும் சோர்வும், பீதியும் மிகுந்து விட்டது. பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது. அந்நியச் செலாவணியும் முற்றுமாக இல்லை.

### பெண்களும் துப்பாக்கி தூக்கும் நிலை

அதேசமயம் தமிழர் பகுதியில் தெம்பும் தெளிவும் மட்டுமல்லாது புதிய ஒரு துணிவும் கூட வளர்ந்து வருகிறது. இன்னும் சிறிது நாட்களில் தமிழ் பெண்களும்கூட ஆயுதம் ஏந்த தயாராகி வருகிறார்கள். பள்ளிக்குச் செல்லாமல் சுற்றி வருகிற பிள்ளைகளும் கூட துப்பாக்கிகளை ஏந்த ஆசைகொண்டு அலைந்து திரிகிறார்கள். இதுபலரும் நேரடியாக அனுபவ பூர்வமாக அறிந்த உண்மைகள்.

ஆயுதமும் ஆன்மபலமும் உள்ளவரை தமிழீழம் மலர்வதை யாரும் தடுக்க முடியாது!

விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# வேங்கை மடல்



அன்பு நண்பா!

சென்ற எமது வெளியீட்டில் இம்மடலின் முதல் பிரசுரிப்பின் மூலம் உன்னையும், அன்புத் தமிழ் உள்ளங்களையும் சந்தித்த மகிழ்ச்சியுடன் தொடர்ந்து இம் மடலையும் வரைகின்றேன். கடந்த மடலிலே நமது விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் (SOLT) ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தினையும், அதில் மாணவர்களாகிய நமது பங்களிப்பினையும் எழுதியிருந்தேன். அதனை வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்த வயதிற் பெரியவர் ஒருவர் மாணவர் இயக்கத்தில் தான் எப்படி இருக்க முடியும் என ஓர் வினாவினை அனுப்பியிருந்தார். இந்த வினா அந்தப் பெரியவர் மனதில் மட்டுமல்ல, மேலும் எத்தனையோ பெரியவர்கள் மனதிலும் எழுந்திருக்கலாம்.

நண்பா! இவ்வாறான வினாக்கள் அவ்வாறான உள்ளங்களில் எழுந்ததற்காக நாம் அவர்களை குறை விளங்கவோ அன்றேல் மனம் நோகவோ கூடாது. இயக்கம் மீது சந்தேகமோ அல்லது விளக்கமின்மையோ இல்லாத போதிலும் கூட, இயக்கத்திற்கு களங்கத்தினையும், வீண் பழிகளையும் ஏற்படுத்தவும் என ஒரு சாராரும், தாம் கொண்ட அற்ப பதவிகளாலும், கல்வித்துறையில் தாம் கொண்ட பட்டங்களினாலும் வீண்பெருமை கொண்டு தம்மைத்தாமே சிறுமைப்படுத்தி ஏதாகிலும் பரபரப்புக்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தவும் தாம் கேட்கின்ற கேள்விகளின் அர்த்தத்தைக் கூடப்புரியாமல் கேள்விகளைக் கேட்டுக்கேட்டே தம் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டும் மறுசாரார் இருக்கின்றனர். இந்தக்காலகட்டத்திலும் இப்படியான அன்பர்களை சந்திப்பதனால் வேதனைப்படவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

நண்பா! பாடசாலையிலோ அல்லது கல்லூரியிலோ கல்வி பயில்வதால்தான் மாணவன் என்பதல்ல. அன்றொரு நாள் வரலாற்றில் புகழ் பெற்ற, பெறுகின்ற ஒரு தியாகத் துறவியின் பிரசங்கம் கேட்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அத் துறவி ஒரு வயோதிப தம்பதிகளை உதாரணத்திற்கு எடுத்து பிரசங்கம் செய்தார். அந்த வயோதிப தம்பதிகள் கல்வி கற்று நல்லதொரு பதவிகளை வகிப்பதுடன் திருமண வாழ்வில் முப்பத்தைந்து ஆண்டுகளையும் கடந்திருந்தனர். ஆனாலும் அவர்கள் வாழ்க்கை என்னும் பாடத்தில் நாளாந்தம் புதிய, புதிய அனுபவங்களைப் பெறுவதனால் அவர்கள் மாணவர்கள் என்ற வட்டத்தினுள்ளேயே வாழ்கின்றனர். என மிகவும் இனிமையாகவும், விளக்கமாகவும் அந்தத் தியாகத் துறவி மாணவன் என்பதற்கான விளக்கத்தினைக் கூறியிருந்தார்.

நண்பா! நாம் வாழ்நாட்களில் ஒவ்வொரு நாளும் புதிய, புதிய அனுபவங்களை, அறிவுகளையும் பெற்ற வண்ணமே உள்ளோம். எனவே வயது நமக்கு, மாணவர் என்பதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாததுதானே. வயதைக் காரணம் காட்டி வீண்விவாதம் வளர்க்கும் நண்பர்கள் ஒரு புறமாக இருக்க, ஏதோ ஒரு துறையில் கல்வியை முடித்து அத்துறையில் பட்டத்தை பெற்ற படித்தவர்கள் என தமக்குள்ளேயே பெருமையை வளர்த்துக் கொண்டிருக்கும் நம் சகோதரர்கள் சிலரும், தாம் எப்படி மாணவர் இயக்கத்தில் இருக்க முடியும் என வாதிடுகின்றனர்.

நண்பா! ஒரு பொறியியலாளராகவோ அல்லது கணக்கியலாளராகவோ, ஏன் வைத்தியராகவோ பட்டம் பெற்று பதவியாற்றுகின்றபோதிலும் கூட, அவர்கள் தாம் கல்வி கற்ற அத்துறையைவிட மற்றைய எந்த விடயத்திலும் அவர்கள் மாணவர்கள்தான் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. "கற்றது கை மண் அளவு கற்கவேண்டியது கடல் அளவு" என காவியங்கள் படைத்த கவிஞர் ஒருவர் மிகவும் அழகாகத் ஒரு பாடலில் கூறியுள்ளார். இன்றைய காலகட்டத்தில் நாம் செய்ய வேண்டியனவைகள், சந்திக்க வேண்டியவைகள், சாதிக்க வேண்டியவைகள் எவ்வளவோ உள்ள போதிலும் கூட தேவையற்ற செயல்களையும் செய்து கொண்டு விதண்டா வாதங்களை வளர்த்துக் கொண்டிருப்பதும் நமக்கு வேண்டியதுதானா?

நண்பா! நம் தாயகத்தைவிட்டு நாம் உயர் கல்வி நாடியும், வேலை வாய்ப்புத்தேடியும், அகதியாய்த் தஞ்சம் கோரியும் பிற நாடுகளுக்கு வந்து விட்டோம். ஆனால் நம் பெற்றோர், சகோதரர், நண்பர்கள் தம் உயிரையும் பணயம் வைத்து நம் தாயகத்தை மீட்க தம் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு அவர்கள் பகைவனின் கொடுமையினால் வீடு இழந்து, உடமையிழந்து, அகதிகளாயும், கை, கால், கண் இழந்து அங்கவீனர்களாயும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஏன் நம் சகோதரிகள் கொடிய அரக்கர்களினால் கோரத்தனமாகவும், மூர்க்கத்தனமாகவும் கற்பழிக்கப்பட்டு வாழ்க்கையே இருண்டதாகி வாழ நாதியற்றவர்களாகவும், விரக்தியுற்றவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

நண்பா! சற்று நேரம் உனது சிந்தனையை நம் தாயகத்தில் நிறுத்திப்பார். அங்கு நம் இனம், நம் சகோதரர், நம் உறவினர்கள் அனுபவிக்கும் வேதனைகளை எண்ணிப் பார். தாயை இழந்த தனையனும், தந்தையை இழந்த மைந்தனும், சகோதரனை இழந்த சகோதரிகளுமாக நம் தாயகத்தின் சோகங்கள் தான் எத்தனை? ஆனால் இத்தனையிலும் உன் பங்கு தான் என்ன? நம் இனத்தின் கஷ்டங்களில், வேதனைகளில் நீ செய்யும் உதவிதான் என்ன? நம் தாயகத்திலே நம் இனம் அனுபவிக்கும் இத்தனை இன்னல்களையும் நாளாந்தம் நீயும், நானும் அறிந்து கொண்டிருக்கின்ற போதிலும் கூட, நம்மிற் சிலர் தன்தோன்றித்தனமான கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் கூறுவதனால் ஏற்படும் மனவேதனையையும் நீயும் உணர்ந்திருப்பாய். நம் இனம் இன்னும் பல கோணங்களில் பிளவுபட்டிருப்பதனால் அதனை சாதகமாக்க நம் எதிரி முயன்றுகொண்டிருக்கின்றான். எனவே இவ்வாறான நண்பர்களும், சகோதரர்களும் நம் இனத்தின் விடுதலையில் பங்கு கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம்.

"ஏளனங்கள் எளிதாக மறையட்டும்
ஏற்றத்தாழ்வுகள் விரைவாக ஒழியட்டும்
வீழ்ச்சியுற்ற தமிழினம் விழிக்கட்டும்
வீணர்களின் கொட்டம் அடங்கட்டும்"

நண்பா! இன்று உற்றார் உறவினரை இழந்து உடமையிழந்து அகதிகளாக்கப்பட்ட நம் சகோதரர்களுக்கு நமது இயக்கத்தால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றோம். அதற்கான பல ஊக்கபூர்வமான உதவிகளை உன்போன்ற உணர்ச்சியுள்ள ஆர்வமிக்க நண்பர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். உன்னால் இயன்ற பண உதவியையோ அன்றேல் பொருளுதவியையோ நீ மனமுவந்து செய்வாய் என்கின்ற நம்பிக்கை எனக்குண்டு. இவ்விடமிருந்து பண உதவியுடன் உடைகள் போன்ற பொருள் உதவிகளையுமே நாம் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறான உதவிகளை நீ செய்யத் தேவையான மேலதிக விபரங்களுக்கு மேற்படி நமது "SOLT" உடன் தொடர்பு கொள்ளும்படி உன்னைக்கேட்டுக்கொண்டு, இம்மடலை முடித்து அடுத்த மடலில் உன்னைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அன்பு நண்பன் செபமணியர்.

இரத்தம் + வியர்வை + கண்ணீர் = தமிழீழ நாட்டின் விடுதலை.

தமிழ் ஆவணகாப்பகம்

https://tamileelamarchive.com/



## நகர்ப்புற கெரில்லா

பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியக் கிராமங்களில் சிறுபடைக் குழுக்களாகப் பரந்திருந்தனர். கெரில்லாக்கள் இச்சிறுபடைக் குழுக்களை இரவு வேளைகளில் தாக்கி அழித்து விட்டு பாதுகாப்பான மலைக்காடுகளுக்கு மீண்டனர். F. L. N. வெற்றிகரமான தாக்குதலை சிறந்த பிரச்சாரமாகக் கருதியது. கிராமப் பகுதிகளில் நடாத்தப்படும் எண்ணற்ற தாக்குதல்களைவிட நகரங்களில் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் மிகுந்த பரபரப்பூட்டும் செய்தியாகும். எனவே அல்ஜியர்ஸ் போன்ற நகரங்களுக்குத் தமது தாக்குதல்களை விஸ்தரித்தனர்.

காடடர்ந்த, கரடுமுரடான மலைகள் நாட்டுப்புறக் கெரில்லாவுக்கு சாதகமாக இருப்பது போல், நகர்ப்புறச் சூழ்நிலை நகர்ப்புறக் கெரில்லாவுக்கு, செயல்படவும், ஒளிந்து வாழவும் வாய்ப்பானதாகும். மிகுந்த சன நெருக்கம், தேடிக் கண்டுபிடிப்பதில் சிரமம், ஒவ்வொருவரையும் பற்றிய விபரந்தெரியாத நிலைமை எளிதான விநியோக வசதி, நகர்ப்புறங்களில் நவீன தொடர்பு சாதன வசதிகள் திடீர்ச் சம்பவங்களினால் அடையும் குழப்ப நிலை போன்றன நகர்ப்புறக் கெரில்லாவுக்கு வாய்ப்பாக அமைகின்றன.

அல்ஜியர்ஸில் கஸ்பா (Casbah) எனப்படும் சேரிக் குடியிருப்பானது நகர்ப்புறக் கெரில்லாக்களுக்கு சிறந்த பாதுகாப்பான தளமாக விளங்கியது. உலகில் சனத்தொகை மிகுந்த சேரிக்குடியிருப்பில் ஒன்றான ஒடுங்கிய, முறிகின்ற தெருக்களும், இரகசியப் பாதைகளும் மற்றும் நிலவறைகளும், சந்து பொந்துகளும், தட்டைக் கூரைகளும் உள்ளன. இவை ஒடி ஒளியவும், மறைந்து வாழவும், பதுங்கிச் சுடவும் வசதியளித்தன.

## கூலிப்படைகள்


கஸ்பாவை 4 பகுதிகளாகப் பிரித்து, 4 கமான்டர்களின் பொறுப்பில் அதன் கண்காணிப்பு வேலை நடைபெற்றது. கெரில்லாக்களின் மறைவிடங்களாகக் கருதப்பட்ட சில முக்கிய இடங்கள் பாரசூட் வீரர்களால் சல்லடை போட்டுத் தேடப்பட்டன. சில இடங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன அல்லது வெறுமையாக்கப்பட்டன. சோதனை மையத் தடைகளைப் போட்டு அப்பகுதியில் கெரில்லா நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினர். வீடு வீடாகவும் சோதனைகளை நடத்தினர்.

குவாட்றிலாஜ் (Quadrillage) எனப்படும் சிறு சிறு படைப் பிரிவுகள் அல்ஜீரியா எங்கணும் செயல்பட்டன. இவை ஐரோப்பிய குடியேறிகளை, அரச உடைமைகளைப் பாதுகாப்பதிலும், சோதனைகளை மேற்கொள்வதிலும், உளவுத் தகவல்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டன. இச்சிறு படைப் பிரிவுகள் கெரில்லாக்களின் தாக்குதலுக்கு இலக்காகி பெரும் அழிவுக்குள்ளாயின.

பாரசூட் பிரிவினர், கடலோடித் தரைப் படையினர், வேற்றின படையினர் (Foreign Legion Soldiers) ஆகிய விசேஷ படைப் பிரிவினர் அல்ஜீரியாவில் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை பரந்தளவிலான படையெழுச்சிகளை நடாத்தினர். இவையும், காடுகளில், மலைகளில் பதுங்கியிருந்து தாக்கும் கெரில்லாக்களுக்கு பாரிய இழப்புகளைக் கொடுக்கவில்லை.

பிரெஞ்சுப் படைத் தளபதிகள் தமது தாக்குதல் திட்டத்தை மாற்றினர். குறிச்சி குறிச்சியாக அல்ஜீரியா முழுவதிலும் தேடுதல் வேட்டை நடத்தி கெரில்லாக்களை முறியடிக்கத் திட்டம் தீட்டினர். முதலில் ஒரு குறிச்சியினுள் அல்ஜீரியரைக் கொண்டு உருவான, நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வேட்டை அதிரடிப் படையை (Commando de chasse) அனுப்புவர். அவர்கள் புரட்சியாளரிடை ஊடுருவி அவர்களது தளங்கள், நடமாட்டங்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வர். புரட்சியாளரைப் பற்றிய சரியான தகவல்கள் கிடைத்ததும், நவீன ஆயுதம் தாங்கிய, பெருந்தொகையான விசேஷ பிரெஞ்சுப் படையினர் தாக்குதலை மேற்கொள்வர். கெரில்லாக்கள் எனத் தாம் சந்தேகிக்கும் அனைவரையும் அழிக்கும்மட்டும் அக்குறிச்சியில் சில வாரங்கள் தங்கியிருப்பர்.

கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் ஆகாயவிமான சேவையை நன்கு உணர்ந்தனர். கெரில்லா இலக்குகள் மீது குண்டு வீச்சுகளும், தாக்குதல்களும் இடம் பெற்றன. கெலிகொப்டர்கள் பிரெஞ்சுப்படை வீரர்களுக்கு உயர் அசைவு திறனைக் கொடுத்தன. விசேஷ படைப் பிரிவினருக்கு பெரிய அமெரிக்க கெலிகொப்டர்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒரு சில நிமிடங்களில் 2 பற்றாலியன் போர் வீரர்கள் தமது தாக்குதல் இடத்தை அடையக் கூடியதாய் இருந்தது. மேற்கூறிய இராணுவ நடவடிக்கை பிரெஞ்சு அரசுக்கு ஓரளவு வெற்றியைக் கொடுத்தது.




அல்ஜியர்ஸில் F. L. N. குண்டுத் தொழிற்சாலை பிரெஞ்சு இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. ▲

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகள்

## அரச பயங்கரவாதம்

புரட்சியாளர்களையும், அல்ஜீரியப் பொதுமக்களையும், மேலான ஆயுத பலம் கொண்டும், அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டும் வெல்லலாமெனப் பிரெஞ்சுக்காரர் கருதினர். பிரெஞ்சு இராணுவமும், குடியேறிகளும் அல்ஜீரிய மக்களைப் படுகொலை செய்தனர். பிடிபட்டவர்களை விசாரணை இன்றிச் சுட்டுக் கொன்றனர். விமான மூலம் குண்டுகளை மக்கள் குடியிருப்புக்களில் வீசினர். கடற்கரையோரமாக யுத்தக் கப்பல்களால் பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்தனர். சில கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. கெரில்லாக்களின் தாக்குதலொன்றுக்குப் பதிலடியாக ஒருமுறை 30000 அல்ஜீரியப் பொதுமக்களைக் கொன்று குவித்தனர்.

கைது செய்யப்பட்ட F. L. N. சந்தேக நபர்கள் கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாயினர். உடலில் மின்சாரம் பாய்ச்சுதல், நீருள் மூச்சுத் திணற முக்கி எடுத்தல், அங்கங்களைச் சிதைத்தல் முதலியன சில சித்திரவதைகளாம். பேச மறுத்தவர்களும், பிழைக்க முடியாத அளவுக்கு சித்திரவதைக்குள்ளானவர்களும் கொல்லப்பட்டு, கடலின் ஆழத்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகவோ தப்பி ஓடும்போது சுடப்பட்டதாகவோ வெளி உலகுக்குக் கூறப்பட்டது.

F. L. N. ஐ உருவாக்கிய 9 பேரில் ஒருவரான பென் மிகிடி (Ben M'hidi) ஒரு போர்வலயத்தின் படைத் தலைவர். அவர் பிரெஞ்சுக்காரரால் கைது செய்யப்பட்டுக் காவலில் இருக்கும் போது கொல்லப்பட்டார். ஆனால் தானே தூக்குப் போட்டுக் கொண்டதாக வெளியில் அறிவிக்கப்பட்டது. பிரெஞ்சு இராணுவத்தின் இரகசிய முகவர்களால் (Secret agents) பயங்கரவாதமும், சித்திரவதைகளும் மனித நாகரீகத்துக்கு' அப்பாற்பட்ட முறையில் காட்டுமிராண்டித்தனமாகக் கையாளப்பட்டன.

சித்திரவதைகள் மூலம் முக்கியமான தகவல்கள் கெரில்லாக்களிடமிருந்து பெறப்பட்டன. ஏராளமான வெடிமருந்துகள், ஆயுதங்களைக் கைப்பற்றியது மாத்திரமல்லாமல், கெரில்லாக்கள் பலரையும் பிரெஞ்சு இராணுவத்தினர் கைது செய்தனர். துரோகிகளை உளவாளிகளாக F. L. N. இல் சேரவைத்து, அவர்கள் மூலம் தகவல்களைப் பெற்றனர். பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் நன்கு ஆராயப்பட்டு, மதிப்பிடப்படுவதற்காக ஒன்றிணைந்த தகவல் திரட்டு தலைமையகத்துக்கு (Unifed Collection Command) அனுப்பப்பட்டன. அங்கு தீவிரவாதிகளைப் பற்றிய சகல விபரங்களும் அடங்கிய விளக்க அட்டவணை (Organigramme) ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5-ம் படையினர்

5ம் அலுவலகம் (5e Bureau) என்ற பிரிவு பிரெஞ்சு இராணுவத்தில் உருவாக்கப்பட்டது. உளவியல் போர் முறை தொடர்பான அதன் அலுவல்கள் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்தன.

1. பொய்ப் பிரச்சாரத்தால் கெரில்லாக்களின் மனோபலத்தையும், புரட்சி மேலுள்ள நம்பிக்கையையும் அழிக்கும் முயற்சிகள் இடம் பெற்றன. இதற்காக ஆகாய மார்க்கமாக அல்ஜீரியா எங்கணும் துண்டுப் பிரசுரங்களை வீசினர். ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஜீப் வண்டிகளிலும் இப்பிரச்சாரங்களை மேற்கொண்டனர். சரணடையும் தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுமென்றும், அவர்கள் நல்ல விதமாக நடத்தப்படுவார்கள் என்றும் அப்பிரசுரங்கள் கூறின.

அயல் நாடுகளில் இருந்து ஆயுத உதவிகளைத் திரட்டும் தலைவர்களுக்கும், உள்ளூரில் இருந்து போரிடும் கெரில்லா வீரர்களுக்கும் இடையே பேதத்தை ஏற்படுத்த பிரச்சாரங்கள் நடைபெற்றன. உள்ளூர் கெரில்லாக்கள் போராட்டங்களில் கடின வாழ்க்கையை எதிர்நோக்குவது போலவும், வெளிநாடுகளிலுள்ள கெரில்லாத் தலைவர்கள் சுகமாக வாழ்வது போலவும் துண்டுப் பிரசுரங்கள் சித்தரித்துக் காட்டின.

2. பிரெஞ்சுப் படை வீரரின் மனோபலத்தை வளர்க்குமுகமாக, அவர்களது வீரதீரம் பற்றியும், வெற்றிகள் பற்றியும், நவீன ஆயுதங்கள் பற்றியும், ஏராளமான பிரசுரங்களையும், சஞ்சிகைகளையும் வெளியிட்டனர்.

3. கைப்பற்றப்பட்ட கெரில்லாப் போர் வீரர்களுக்கு, அவர்கள் செய்தது தவறு என்றும், பிரெஞ்சு அரசுக்கு அவர்கள் விசுவாசமாக நடக்க வேண்டும் என்றும் மறுபோதனை (Re-education) அளிக்கப்பட்டது.

பிலிப்வில் நகரில் பிரெஞ்சு இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி அல்ஜீரிய மக்கள். ▼



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



**4.** பயங்கரவாதமும், சித்திர வதைகளும் கெரில்லாக்களின் மனோபலத்தை முறியடிக்க தாராளமாகக் கையாளப்பட்டன.

## மொறிஸ் லைன்


எகிப்து, சிரியா, ஈராக், லிபியா போன்ற அண்டை அரபு நாடுகளில் அல்ஜீரிய கெரில்லாக்கள் ஆயுதப் பயிற்சி பெற்றனர். இந்நாடுகளும், ருஷ்யா போன்ற சமதர்ம நாடுகளும் கெரில்லாக்களுக்கு ஏராளமான ஆயுதங்களை வழங்கின. பயிற்சி பெற்ற கெரில்லாக்களும், ஆயுதங்களும், உணவு விநியோகங்களும் எல்லை நாடுகளான மொரோக்கோ, துனீசியா ஆகியவற்றுக் கூடாக அல்ஜீரியாவை அடைந்தன. இதனைத் தடை செய்யும் பொருட்டு, இவ்விரு நாடுகளுடனுள்ள எல்லையில் பிரெஞ்சு இராணுவம் பாதுகாப்பு தடையரண்களை ஏற்படுத்தியது. இவ்வெல்லைப் பகுதிகளை மனித நடமாட்டத்துக்கு உதவாத பூமி (No man's land) ஆக்கியது. அவை ஆகாய மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் இடைவிடாது கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

துனீசிய எல்லையினூடாகவே அதிக கெரில்லா ஊடுருவல்கள் இடம் பெற்றன. அவ்வெல்லையிலேயே அதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அங்கு போடப்பட்ட பாதுகாப்புத் தடை அரண் மொறிஸ் லைன் (Morice Line) எனப்பட்டது. இத்தடை அரண் மெதித்திரேனியன் கடலிலிருந்து சகாரா பாலைவனம் வரை மலைகள், காடுகளுக் கூடாக துனீசிய எல்லை பூராக 740 கி. மீற்றருக்குப் போடப்பட்டது.

**5000 வோல்ற்று மின்சாரம்** பாயும் முட்கம்பி வேலி. அதன் இரு பக்கமும் 45 மீ. அகலத்துக்கு கண்ணி வெடி வயல் - அது ஒரு கொலை நிலம் (Killing ground) அதனை அடுத்து சிக்கலான முட்கம்பி வேலித் தடைகள். இவ்வேலிக் கருகே பிரெஞ்சு காலாட் படையினர் ரோந்து செய்வதற்கான பாதை ஓடியது. இரவும் பகலும் இடைவிடாது இயங்கி அப்பகுதியை ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தின தேடொளி விளக்குகள் (Search lights).

எவராவது மின்னிணைப்பைத் துண்டித்து உள் நுழைய முயன்றால், மின்னியக்கக் கருவிகள் (Electronic devices) அண்மையிலுள்ள தலைமை நிலையத்துக்கு எங்கே, எப்போது நடந்தது என்ற விபரத்தை மணி ஒலித்துக் காட்டிவிடும். எச்சரிக்கையைத் தொடர்ந்து ராடார் கருவி, சம்பவம் நடந்த இடத்தின் தூரத்தைக் கணிப்பிட்டு, பீரங்கிகளின் திசைகளை அவ்விடத்துக்கு குண்டுகளை வீச ஒழுங்கு செய்யும். உடனே 105 மி. மீ. ஹோவிட்சர் (Howitzer) பீரங்கிகள் அவ்விடத்தை நோக்கிச் சுடுதலை மேற்கொள்ளும். இவ்வகை பீரங்கிகள் 18 கி. மீ. தூரம் வரை சுடும் ஆற்றலுள்ளவை. மேலும் அரண் காவல் படையைச் (Garrison) சேர்ந்த அசையும் படைகள் (Mobile forces) கவச வாகனங்களில் அவ்விடம் விரையும். இத்தனை தடைகள் நிறைந்த இத்திரையை மீறி கெரில்லாப் படைப் பிரிவுகள் உள் நுழைந்துவிட்டால், அவற்றுடன் மோதுவதற்கு டாங்கிகள், கெலிகொப்டர்கள் சகிதம் 4 உயர் அசைவு திறன் வாய்ந்த பாரசூட் பிரிவினர் தயாராய் இருந்தனர்.

இத்தடைகளை வென்று A.L.N. கெரில்லாக்கள் உள் நுழையவே செய்தனர். பொதுவாக இரவிலேயே தமது முயற்சியை மேற்கொள்வர். ஒரு கெரில்லாப் படைப் பிரிவு திசை திருப்பல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பிரெஞ்சுப் படைகளின் கவனத்தை வேறோரிடத்தில் நிறுத்தி வைக்கும். இன்னொரு பிரிவினர், உயர் மின்செறிவு வெட்டுக் கருவி (High tension cutters) பெங்களூர் டோபிடோ, சுரங்க வழிகள், சாய்தளப் பலகைகள் (Ramps) முதலியன துணைகொண்டு, பாதுகாப்புத் தடை அரணை மீறி உள் நுழைந்தனர்.



பிரெஞ்சு இராணுவம் அல்ஜீரிய இளைஞர்களை சுற்றி வளைத்துப் பிடிக்கிறது ▲

நகர்ப்புறங்களில் வேலைநிறுத்தங்களையும், ஊர்வலங்களையும் தமது போராட்டத்துக்குக் கருவிகளாகப் பயன்படுத்தினர். ஆயுதப் போராட்டத்துக்கு, அதனை நடத்தும் இயக்கத்துக்கு பொதுமக்களின் ஆதரவை உலகுக்கு எடுத்துக் காட்டும் பிரச்சாரத்துக்கு இவை பயன்பட்டன.

## F. L. N. பயங்கரவாதம்

1. புரட்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் அல்ஜீரிய எதிர்ப் புரட்சியாளர்களை பயத்தின் மூலம் செயலிழக்கச் செய்யவும்,

2. குடியேறிகளை கிலிகொள்ள வைத்து அல்ஜீரியாவிலிருந்து வெளியேற்றவும்.

**3. பிரெஞ்சுப் போர் வீரர்களை உளவியல் ரீதியாகத் திகில் அடையச் செய்து போராட்டங்களில் தோல்வியைத் தழுவச்** செய்யவும்,

பயங்கர வாதத்தை ஒரு போராட்ட அம்சமாக F. L. N. கைக்கொண்டது.


பயங்கர வாத நடவடிக்கைகளுக்கென F. L. N.-இன் கீழ் ஒரு குழு இயங்கியது. அக்குழு வேறொரு புறம்பான இயக்கமாக வெளிப் பார்வைக்குச் செயல்பட்டது. அதன் கொடூர நடவடிக்கைகளை F. L. N. பொய்யாகக் கண்டிக்கவும் செய்தது. இந்நேரடி நடவடிக்கைக் குழு அல்ஜியர்ஸ் போர் மண்டலப் படைத் தலைவனின் நேரடி மேற்

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



அல்ஜியர்ஸில் அல்ஜீரிய மக்கள் F. L. Nக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் நடத்துகின்றனர் ▼



பிரெஞ்சுப் போர்வீரரின் பலவீனங்களைப் பயன் படுத்தி, பெண்கள் இராணுவ இரகசியங்களைக் கறந்த னர். வெடிகுண்டுகளை வேறிடங்களுக்குக் கடத்து வதிலும், இலக்குகளில் வைப்பதிலும் பெண்கள் பெரும் பங்கு வகித்தனர்.

பார்வையில் இருந்தது. வெடி குண்டு வைத்தல், கொடூரமாக அரசியல் கொலைகளைச் செய்தல், என்பன இவர்களது விசேஷ செயல்பாடுகளாக விளங்கின. கவனிப்பாரற்ற கார் திருத்து மிடங்களில், கடைசல் இயந்திரங் களைப் பொருத்தி, வெடிகுண்டு களுக்குத் தேவையான பாகங் களைச் செய்தனர். வெடிகுண்டு களை வேறிடங்களுக்குக் கடத்து வதிலும், இலக்குகளில் வைப்பதி லும் பெண்கள் பெரும் பங்கு வகித்தனர். அல்ஜியர்ஸில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நாளொரு நிகழ்ச்சியாகிவிட்டது. பிரெஞ்சுக்காரர் பெருமளவில் கூடுகின்ற தேனீர் சாலைகள், சூதாட்ட இடங்கள், திரைப்பட, நடன அரங்குகள், விளையாட்டுத் திடல்கள் ஆகியன F. L. N. நேரடி நடவடிக்கைக் குழு வின் குண்டு வைப்பு இலக்கு களாயின. ரேடியோ கட்டுப் பாட்டு கண்ணி வெடிகளை யும் (Remote Control mines) நாச வேலைகளுக்குப் பயன்படுத் தினர்.

பயங்கரவாத நிகழ்ச்சி பற்றிய செய்தி எங்கும் பரவி அதன் தாக்கத்தைக் கொடுக்கவேண்டும் என்பதற்காக சில பயங்கரவாத நடவடிக்கைகள் வெளியரங்க மாக நடாத்தப்பட்டன. உதார ணத்துக்குச் சில.

பிரெஞ்சுப் போர் வீரர் கழுத்து குத்திக் கிழிக்கப்பட்டு, சலூட் பண்ணும் பாவனையில் தெருக் கம்பத்தில் கட்டி நிறுத்தப்பட் டனர்.

ஐரோப்பிய குடியேறிகள் தயா ரித்த புகையிலையைக் குடிக்கும் அல்ஜீரியர்களின் வாய், மூக்கு என்பன வெட்டப்பட்டன.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவளிக்கும் அல்ஜீரியர்கள் கடித மூலம் எச்சரிக்கப்படுகிறார் கள். எச்சரிக்கையை மீறுவோர் கொல்லப்பட்டு, அவர்களுக்கு விதித்த தீர்ப்பு அடங்கிய காகி தத் துண்டு கழுத்தில் தொங்க விடப்படும்.

இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகள் பிரெஞ்சுக்கார ருக்கு ஆதரவளிப்போரையும், தகவல் கொடுப்போரையும் வெகு வாகக் குறைத்தது.

F. L. N.-இன் மேற்கூறிய நடவடிக்கைகள் அல்ஜீரிய மக்க ளின் விடுதலைப் போராட்டத்தில் வெற்றிக்கான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. இழந்த இறை மையை இரத்தம் சிந்தி, மீட்ப தற்கான போராட்டம் வெற்றிப் பாதையில் சென்றுகொண் டிருந்தது.

**கெரில்லாப் போர் என்பது அரசியல் விடுதலையையும், பூரணத்துவமான வாழ்வை யும் அடைவதற்கான மக்கள் இயக்கத்தை அடிப்படை யாகக் கொண்டது. ஆக்கிர மிப்பு வன்செயலை இயல் பான தன்மையாகக் கொண் டது. அது மிகையான வன் செயலால் எதிர்க்கப்படும் போதுதான் அடிபணிகிறது. (Occupation is violence in its natural state; and it will only yield when con- fronted with greater vio- lence.)**

எனவேதான் F. L. N. போர் மண்டலப் படைத் தலைவர்களில் ஒருவர் கூறினர்.

**"சுதந்திரம் கேட்டு வழங்கப்படுவதில்லை. போராடிக் கைப்பற்றப்பட வேண்டியதொன்று" (Independence is not offered; it is seized.)**

எல்லைப்புறக் கிராமங்கள் கெரில்லாத் தளங்களாக விளங் கின. உணவு, ஆயுத வினி யோகங்களுக்கு, மறைந்து வாழ் வதற்கு இக்கிராம மக்களிலேயே கெரில்லாக்கள் பெரிதும் தங்கி யிருந்தனர். உள்ளூர் மக்களின் ஆதரவில் இருந்து கெரில்லாக் களைப் பிரிப்பதற்காக, அக்கிரா மங்களிலிருந்து பெரியளவில் பொதுமக்களை அப்புறப்படுத் தினர். கொன்ஸ்ரன்ரைன் பகுதி யில் மட்டும் 3 இலட்சம் மக்களை பலவந்தமாக அப்புறப்படுத் தினர்.

அம்மக்கள் ஒன்று திரட்டப் பட்டு, முட்கம்பி வேலியிட்ட முகாம்களிலும், மாதிரிக் கிராமங் களிலும் திரும்பக் குடியிருத்தப் பட்டார்கள். அங்கு உளவாளிகள் ஊடுருவியிருந்தனர். பொது மக்கள் அகற்றப்பட்ட எல்லைக் கிராமங்கள் கெரில்லாப் பிர தேசங்களென அறிவிக்கப்பட் டன. அங்கு அசையும் பொருட் கள் எதனையும் சுடுவதற்கு பிரெஞ்சுப் படைகளுக்கு (Free fire zones) அதிகாரம் வழங்கப் பட்டது.

## சந்தப்படுத்தும் திட்டம்

**இராணுவ பலத்தால் மாத்** திரம் கெரில்லாக்களை முறியடிப் பது முடியாது என பிரெஞ்சு அரசு உணர்ந்தது.

தொடரும்...

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



அன்பின் தமிழ் மக்களே தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு ஒன்று கடந்த ஐந்துமாத காலமாக பிரித்தானியாவிலும் இயங்கி வருகிறது.

கடந்த முப்பது ஆண்டு காலமாக நம் தமிழினம் காணும் துன்பங்கள் யாவும் நாம் கூறி தெரியவேண்டிய விடயமல்ல.

நமது முன்னோர் அகிம்சைவழிப்போராட்டங்கள் மூலமாக தமிழினத்தின் உரிமைகளை பாதுகாக்க முற்பட்டு படுதோல்வி அடைந்ததை தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம் இனவெறி பிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு ஒரு சவாலாகவும், தமிழ் மக்களுக்கோர் கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தது. இச்சிங்கள ஏகாதிபத்தியம் விடுதலைப்புலிகளினை முறியடிப்பதற்கு பல தந்திரோபாயங்களையும், சூழ்ச்சிகளையும், அன்னியர்களின் போர்முறைகளையும் பாவித்தது. இன்றும் பாவித்து வருகிறது ஆனால் விடுதலைப் புலிகள் அன்றிலிருந்து இன்று வரையும் ஒவ்வோர் கால கட்டங்களிலும் தமிழின விடுதலைக்கு சிறந்த வழியை தேர்ந்தெடுத்து சிங்கள ஏகாதிபத்தியத்தின் திட்டங்களை முறியடித்து வந்தனர். இன்னும் முறியடித்து வருகின்றனர். அது மட்டுமின்றி தமிழினத்தின் விடுதலைக்கு பங்கம் விளைவித்த கயவர்களை அழித்தும் வந்தனர். அழிவிருந்து தப்பிய சில விஷக் கிருமிகள் தாமும் தமிழினத்தின் விடுதலைக்கு போராடுகின்றோம் என்று கூறி ஆடிய நாடகங்களை தமிழீழத்தில் பலிக்காதது கண்டு இன்று தமது சுக போக வாழ்க்கைக்காகவும், பதவிகளுக்காகவும், பிரித்தானியாவிலும், இன்னும் பல வெளிநாடுகளிலும்வந்து கூட்டங்களை கூட்டி தமிழ் மக்களுக்கு புச்சாண்டி காட்ட முனைகின்றார்கள் இவர்களை இனங்காணுங்கள், முகத்திரையை கிழித்து எறியுங்கள், இக்கெட்ட சக்திகளை வெளிநாடுகளில் இருந்து தாக்கி எறியுங்கள்.

பிரித்தானிய தமிழ் மக்களே நீங்கள் எங்களைப் பார்த்துக் கேட்கலாம் ஒரு கேள்வி விடுதலைப்புலிகள்தான் தமிழினத்தின் விடுதலைக்காக சரியான வழியில் போராடுகின்றதா என? நாம் திட்டவட்டமாக கூறுகின்றோம் ஆம்.

ஏன் அப்படி கூறுகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

(1) தமிழினத்தை காப்பதற்கு ஒரே வழி ஆயுதப்போராட்டம்தான் என்க்கூறினார்கள் விடுதலைப்புலிகள். ஆனால் அன்று பதவி மோகமும், பணஆசைகளும் பிடித்த சில அரசியல் வாதிகளின் பேச்சை நம்பினார்கள். அகிம்சை வழிப்போராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஆனால் இன்று ஆயுதப்போராட்டமே சரியானது என உணர்ந்தார்கள்.

(2) தமிழினத்தின் விடுதலையை முன்னெடுக்க கெரில்லாப் போராட்டமே சிறந்தது எனவிடுதலைப்புலிகள் அன்று கூறினர். அத்துடன் நடைமுறைப்படுத்தியும் காட்டினர் இன்று நம் தோழமை இயக்கங்களாக விளங்கும் சிலர், அன்று விடுதலைப்புலிகளின் கொள்கையை எதிர்த்து பிரச்சாரங்கள் செய்தனர். இன்று அவர்கள் புலிகளின் பாதையில் காலடி வைத்துள்ளனர்.

(3) இன்னும் சில இயக்கங்கள் மக்கள் போராட்டமே சிறந்தது என்றும் பொங்கலுக்கு தமிழீழம் தருகிறோம் என்றும் தீபாவளிக்கு தமிழீழம் தருகிறோம் என்றும் தம் வயிற்றை வளர்த்து வருவதும் காணுமல், மக்கள் போராட்டம் என்று சொன்ன அவர்கள் இன்று மக்களை நோக்கி துப்பாக்கிளை திருப்பியும் உள்ளார்கள்

(4) கொரில்லாப் போராட்டமே வெகுஜனப் போராட்டத்தின் முன்னோடி என்று விடுதலைப்புலிகள் அன்று கூறினார்கள், இன்று நிருபித்துள்ளார்கள். மக்கள் போராட்டத்தை நேரடியாக நடத்துவதன் மூலம் உயிர் இழப்பைக்குறைக்கலாம் என்று கூறினார்கள். இன்று நிருபித்துள்ளார்கள். மக்கள் போராட்டத்தை நேரடியாக நடாத்துவதன் மூலம் உயிர் இழப்பை குறைக்கலாம் என்று கூறினார்கள், சில வரலாறு தெரியாத மடையர்கள். இன்றும் இப்படி இவர்கள் கூறி ஏமாற்றலாமா?

தமிழீழம் வேண்டும், தமிழினம் வாழ வேண்டும் என விடுதலைக்காக ஆயுதம் தாக்கிய விடுதலைப்புலிகளுக்கு தெரியும், உயிர்களை எப்படி பாதுகாப்பது என்று. அத்துடன் தமிழ் மண்ணுக்கு விடுதலை வேண்டுமானால், தமிழ் மொழிக்கு விடுதலை வேண்டுமானுல், தம் இளம் தலைமுறைக்கு விடுதலை வேண்டுமானுல், நம் உயிர்கள் சிலவற்றை இழக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளுக்கு தெரியும்.

'வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணுத் துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை'.

வே. பிரபாகரன்.
(தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்)

ஆகவேதான் நாம் கூறுகிறோம், விடுதலைப் புலிகளின் பாதை சரியானது, அவர்கள் அனுபவத்தில் முதியவர்கள், தீர்க்க தரிசிகள், நிச்சயமாக தமிழினத்தின் விடுதலைப் பாதையை முன்னெடுத்துச் செல்வார்கள். அவர்கள் பாதையில் நாம் பின் தொடர்வோம்.

அன்பின் தமிழ் மக்களே, நாம் இன்று பிரித்தானியாவிலும், வேறு வெளிநாடுகளிலும் உண்ண உணவுடனும், உடுக்க சிறந்த உடைகளுடனும், இருக்க சிறந்த வீடுகளுடனும் இருக்கிறோம். இன்னும் கலை நிகழ்ச்சிகள், களியாட்டு விழாக்கள் இப்படி பல, ஆனால் நம் தாய்மார், தந்தைமார், சகோதரங்கள், உறவினர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடுக்க உடையின்றி, படுக்க இடம் இன்றி தவிக்கும் அவல நிலையை மறக்க முடியாது, மறக்கவும் கூடாது. ஆகவே எம்மால் இயன்ற உதவிகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு செய்ய முன்வந்து விடுதலையை துரிதப்படுத்துவது எமது கடமையாகும்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளைப் பலப்படுத்த புதுவேகத்துடன் இயங்கிவரும் இவ் வேளையில், சில தமிழ் மக்களின் வீடுகளில் புலிகளுக்கு உதவி கேட்டு போகும் போது, ஒன்றுமே இல்லையென கையை விரிப்பதும், இன்றும் சிலர் எங்கள் இனிய செந்தமிழை மறந்து அன்னியனின் அழுத்தப்போன ஆங்கில வார்த்தைகளால் திட்டியும் சிலர் விடுதலையை அலட்சியப்படுத்தி கதைத்தும் வருகிறார்கள்.

தமிழ் மக்களே சிந்தியுங்கள், நாம் நாட்டிற்காக செய்யும் ஒரு சிறு உதவியால் இங்கு சாப்பாட்டிற்கு கஷ்டப்படவா போகிறோம். நாம் அன்பாக "அம்மா" என்று கூப்பிடும் தமிழ் மொழியின் இனிமையா, இல்லை அன்னியனின் ஆங்கில மொழியா சிறந்தது? நாம் எப்படித்தான் இங்கு வாழ்ந்தாலும் அடிமை விலங்கை அகற்ற முடிகிறதா? எம் தமிழினத்திற்கு விடுதலை தரப்போகும் தமிழினத்தையா அலட்சியப்படுத்துவது?

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் மூலமாக உங்கள் முன்னிலையில் வரும் இளைஞர்கள் தம் நலங்களுக்காக உங்களிடம் கையேந்தி வரவில்லை. அவர்களுக்கும் உங்களைப் போல் படிக்க வேண்டிய தேவை உண்டு. அவர்களுக்கு வேலை

தொடர்ச்சி பக்கம் 10

வீர சுதந்திரம் வேண்டி நின்றோம், பின்னர் வேறொன்று கொள்வோமோ?

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

1ஆம் பக்கத் தொடர்ச்சி



# விடுதலைப் புலிகளின் தளபதி பிரபாகரனுடன் சிறப்பு பேட்டி!

## வெற்றி அல்லது வீர மரணம்!

''தம்பி! (பிரபாகரனின் செல்லப் பெயர்) உங்கள் இயக்கத்தினரை அழைத்து இந்தியாவிலுள்ள மாநில அமைப்புகளை போன்ற உரிமையை இலங்கை அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஜி. கே. மூப்பனார் வற்புறுத்தியதாக சொல்கிறார்களே உண்மை தானா?''

''அது தவறானது. எங்களை இதுவரையில் யாரும் வற்புறுத்தவில்லை. அப்படி வற்புறுத்தினாலும் அதற்கு நாங்கள் இணங்கப்போவதில்லை!''

''போர் நிறுத்தம்என்ற பெயரில் அப்பாவி மக்களை சிங்கள ராணுவமும் ஊர்க்காவல் படையும் வேட்டையாடி வரும் போது நீங்கள் மட்டும் அமைதியாக இருப்பது எந்த வகையில் நியாயம்?''

''நாங்கள் உண்மையான போர் நிறுத்தத்தைத் தான் விரும்புகிறோம். அதே நேரத்தில் மக்கள் தாக்கப்படும்போது பதில் தாக்குதலும் நடத்தி இருக்கிறோம்.

பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கும் போது ஏற்படும் இப்படிப்பட்ட அழிவுகளுக்கு இந்திய அரசு தான் பொறுப்பு என்பதையும் நாங்கள் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறோம்.''

''நீங்கள் நான்கு அமைப்புகளும் இணைந்து இருக்கிறீர்களே- ஈழத்தின் எல்லைகளைப்பற்றி பேசி விட்டீர்களா?''

''இப்போது இணைந்திருக்கும் நோக்கம் பொது எதிரியை சந்திப்பதற்காகவே'' என்ற பிரபாகரன், இணைப்பு பற்றி ஒரு சிறு விளக்கத்தையும் தந்தார்.

''டெலோ, இபிஆர்எல்எப், ஈரோஸ் அமைப்புகள் அடங்கிய இஎன்எல்எப்.புடன் நாங்களும் (புலிகள்) சேர்ந்து செயல்படுகிறோம் காலப் போக்கில் எங்களைப் பற்றிய முரண்பாடுகளை பேசி தீர்த்துக் கொள்வோம்.

''பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தியே சிங்களர்கள் தங்கள் வலிமையை பெருக்கிக் கொண்டு விட்டார்கள். நவீனரக ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அவர்களை சமாளிக்க உங்களிடம் ஆயுத பலம் உள்ளதா?'' என்றதும் சிரித்து விட்டார் பிரபாகரன்.

''எதிரியிடம் இருக்கும் ஆயுதம் பலபேரைக் கொல்லக் கூடியவைதான். அதிநவீனமானவைதான். அந்த ஆயுதங்கள் எங்கள் கைக்கு வந்தாலும் அந்த வேலையைத்தானே செய்யும்.

எனவே அந்த ஆயுதங்களை அவர்களிடம் இருந்தே நாங்கள் பெற்றிருக்கிறோம். அதாவது கைப்பற்றி இருக்கிறோம்.''

''பெட்ரோல் குண்டு (நாபாம்) கதிர்வீச்சு (லேசர்) போன்ற நாசசக்தி கருவிகளையும் அவர்கள் வைத்திருக்கிறார்களே'' என்று கேட்டதும் மீண்டும் கடகடவென சிரித்தார்.

''யுத்த முறையில் எந்த ஆயுதத்திற்கும் பாதுகாப்பு வசதி உண்டு. அதை பயன்படுத்தும் முறையும் எங்களுக்குத் தெரியும். பாதுகாப்பு வழிகள் இருக்கின்றன. ஆயுதங்கள் மட்டுமே முக்கியமல்ல. தந்திரங்களும், உபாயங்களும்தான் முக்கியம்.

''சிங்களவர்களின் வெறியாட்டத்தினால் அதிக அளவில் இங்கு அகதிகள் வந்து விட்டார்கள். எஞ்சியிருப்பவர்கள் அங்கு மிகவும் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறதே?

அதிகமாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் இன்னும் அங்கு தான் இருக்கிறார்கள். தங்கள் மண்ணை எப்பாடு பட்டேனும் காக்க வேண்டும் என்ற உணர்வுடன் அங்கேயே இருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டம் என்றால் அழிவுகள் இருக்கத் தானே செய்யும்: இதை எம் மக்கள் நன்றாகவே அறிந்துள்ளனர்.

அவர்களை நாங்கள் பாதுகாத்துக் கொண்டு வருகிறோம். கண்ணி வெடிகள், மிரட்டல் இவற்றினால் ராணுவத்தினர் சில பகுதிகளில் வெளிவரவே பயப்படுகிறார்கள். பெரிய அளவில் உதவிகளும், ஆயுதங்களும் கிடைத்தால் முழுக்க, முழுக்க எங்கள் ஆதிக்கமே அங்கு இருக்கும்.

பெரிய தாக்குதலுக்கு தயாராகி வருவதாக ஜே. ஆர். கூறியிருப்பது மிகைப்படுத்திய கூற்றே! இன வெறி பிடித்த அரக்க கூட்டத்திடமிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ள எடுத்துக்கொள்ளும் முயற்சியே அது. வெளிநாடுகளிடம் உதவி பெறுவதற்காக பொய்யான தகவலை சொல்லி வருகிறார். நாங்கள் சிங்களவரை தாக்குவதாகச் சொல்வது பொய். எங்கள் மக்களை பாதுகாக்கவே போராடுகிறோம்.

''இந்திரா காந்தியின் அணுகு முறை ஈழத் தமிழ் போராளிகளுக்கு சாதகமாக இருந்தது என்றும் ராஜீவ்காந்தி வந்த பிறகு அது மாறி விட்டது என்றும் தோன்றுகிறதே. உண்மை தானே?''

''வேறுபாடு இருப்பதாக தெரியவில்லை!''

''வேறுபாடு இல்லை என்கிறீர்கள். மூன்று போராளிகளை நாடு கடத்தும்படி உத்தரவிட்டது எதைக் காட்டுகிறது?

''அப்படிப்பட்ட உத்தரவு போட்டிருந்தாலும் தமிழக மக்கள் காட்டிய உணர்வு மூலம் அந்த நடவடிக்கை தவறு என்பதை உணர்ந்திருக்கலாம்!''

''உங்களை நிர்ப்பந்தம் செய்திருக்கிறார்கள் என்று மீண்டும் சொல்கிறேன்?''

''இல்லை! அப்படி இருந்தால் அதை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை!''

''பின் ஏன் தலை மறைவு ஆனீர்கள்?''

''தலைமறைவு அல்ல. நான் நாடு (ஈழம்) செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. அங்கு நான் சென்ற போது இங்கு நாடு கடத்தல் நடந்திருக்கிறது. இது தற்செயலாக நடந்ததே தவிர நான் தலைமறைவாக செல்லவில்லை. இது தான் உண்மை!''

''மொசாத்- எஸ்.ஏ.எஸ். இந்த இரு பிரிவினரும் அழிக்கப்பட வேண்டிய வெளிநாட்டு கூலிப்படையினர். இவர்கள் மீதும் நீங்கள் தாக்குதல் நடத்த வேண்டியது தானே?''

''இவர்கள் அங்கு(ஈழம்) தனியாக வருவதில்லை. சிங்களருடன் சேர்ந்தே வருவார்கள். எங்கள் தாக்குதலில் இவர்களில் சிலர் அழிக்கப்பட்டிருக்கலாம். இதை ரகசியமாக வைத்திருக்கிறார்கள்.

இசுரேலின் இன்னொரு ஏஜன்சி அமைப்பு இருக்கிறது. 'SIN BAD' என்ற அமைப்பு அங்கு செயல் பட்டுக் கொண்டு இருக்கிறது. இதே போல் எஸ்.ஏ.எஸ்.சின் 'கே.எம்.எஸ். என்ற 'KINI MINI SERVICE' என்ற பிரிவும் இருக்கிறது. இவர்களைப் பற்றிய எல்லா விவரங்களும் எங்களுக்கு தெரியும்''

சிங்கள ராணுவத்தின் சகல ரகசியங்களும் பிரபாகரனுக்கு நன்றாக தெரிந்து இருக்கிறது.

மிகத்திறமையான இளைஞர்கள் புலிப்படையில் இருக்கிறார்கள் என்பதையே இது காட்டியது.

''தமிழ்நாட்டில் சிங்கள ஒற்றர்கள் திரிவதாக சொல்கிறார்களே உண்மைதானா?''

''சிங்கள ஒற்றர்கள் நேரடியாக இங்கு வரவில்லை. அகதிகள் என்ற பெயரில் காட்டிக் கொடுக்கும் சிலர் இங்கு வந்திருக்கலாம்'' என்று மனம் வருந்திக் கூறினார்.

அவர் வருந்தியது சிங்கள ஒற்றர்களுக்காக அல்ல. அகதிகள் பெயரில் ஒற்றர்களாக வந்துள்ள எட்டப்பன்களுக்காக! தன் விரலே தன்னை குத்தலாமா?

''ஈழப் பிரச்சனையில் உங்களுக்கு உடன்பாடான மாற்றுத் திட்டம் என்ன?''

''தமிழ் ஈழம்தான் எங்களின் முடிவான முடிவு!''

''அந்த முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என்று இந்திய அரசு வற்புறுத்தினால்?''

**தமிழீழம் மலரும்வரை போராடுவோம்!**

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



9 ஆம் பக்கத் தொடர்ச்சி

''எங்கள் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை இந்திய அரசு காட்டுமானால் நாங்கள் பரிசீலிக்கத் தயார். 'தமிழ் ஈழம்' தான் எங்கள் வழி. இதை விட சிறப்பான ஒரு வழியை காட்டட்டும். பரிசீலிக்கிறோம்!''

''ஈழத்தமிழர்கள் எதை விரும்புகிறார்கள்?''

''பேச்சு வார்த்தைக்கு போகாதே என்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். இனப்படுகொலை கூடாது. அமைதி நிலவ வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அந்த அமைதி நிரந்தர அமைதியாக இருக்க வேண்டும். எனவே தனி ஈழம் தவிர வேறு மாதிரியான முடிவுக்கு வராதே, பேச்சு வார்த்தைக்கு போகாதே என்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்''

''இந்திய அரசு ஏற்பாடு செய்தால் நீங்கள் ஜெயவர்த்தனேயுடன் பேச்சு நடத்தத் தயாரா?''

'ஓ!' என்று சொன்ன பிரபாகரன், ''எங்கள் தமிழ் ஈழ எல்லைகளை பற்றி பேசுவதே ஜே. ஆரிடம் பேசுவதற்குரியது என்று கருதுகிறோம்!'' என்று தன் நிலையை தெளிவாக்கினார்.

''இப்போதே தமிழ்ப் பகுதிகளில் போலீஸ் நிர்வாகம் இல்லாமல் போய் விட்டது. போலீஸ் நிலையங்கள் ராணுவ முகாம்களாகி விட்டன. அவர்களும் எங்களுக்குப் பயந்து வெளி வருவதில்லை. போலீஸ் செய்ய வேண்டிய நிர்வாக ஒழுங்குகளை, மக்கள் பிரச்சனைகளை இப்போது போராளிகள் தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாக சொன்னால் சிவில் நிர்வாகம் எங்களிடம்தான் இருக்கிறது.

தமிழ் ஈழத்தில் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. கல்வி, சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அதற்குள் வாழ எங்கள் மக்கள் பழகிக் கொண்டு விட்டார்கள். இதற்கு காரணம் சுதந்திர உணர்வே!'' என்று உணர்ச்சி வசப்பட்டார் பிரபாகரன்.

''கடைசியாக ஒரு கேள்வி: எங்களுடைய யோசனையை கேட்காததால் நீங்கள் இந்த மண்ணிலிருந்து செயல்படக் கூடாது. அனைவரும் வெளியேறி விடுங்கள் என்று இந்திய அரசு தேதி நிர்ணயிக்குமானால் என்ன செய்வீர்கள்?''

—இதைக் கேட்பதற்கு சங்கடமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நம் இந்திய ஆட்சியாளர்களின் போக்கு அப்படியெல்லாம் இருக்கிறதே—

ஆனால் பிரபாகரன் கொஞ்சமும் தயங்காமல், தளராமல் பதில் சொன்னார்.

''நாங்கள் ஆரம்பத்திலிருந்தே எங்கள் மண்ணிலிருந்து தான் போராடி வருகிறோம். அது மட்டுமல்ல. எங்கள் சுதந்திரப் போரை எங்கள் மக்களை நம்பித்தான் ஆரம்பித்திருக்கிறோம். எங்கள் மக்களும் தயாராகவே இருக்கிறார்கள். எனவே நாங்கள் தொடர்ந்து எங்கள் மண்ணிலிருந்து போராடுவது கடினமான காரியமல்ல. அது மட்டுமல்ல. எங்கள் விடுதலைப்புலி அமைப்பில் பெரும்பகுதியினர் தமிழீழ மண்ணிலிருந்துதான் போராடி வருகிறார்கள்.

நாங்கள் சில அடிப்படை உதவிகளுக்காகத் தான் தமிழக மக்களுடன் எங்கள் சகோதரர்களுடன் உறவு வைத்திருக்கிறோம். நீங்கள் சொல்வது மாதிரியான நிலை வந்தால் நாங்கள் எங்கள் நாட்டுக்குச் சென்று உரிமைக்காக பாடுபடுவோம்,

ஆனால் உடன் பிறவா சகோதரர்களான தமிழக மக்கள் அவ்வாறான நிலைக்கு செல்லவிட மாட்டார்கள் என்று நம்புகிறேன்''

தாய்த் தமிழக மக்கள் மீது பிரபாகரன் வைத்திருக்கும் நம்பிக்கை நெகிழ வைத்தது.

அந்த வீரத் திருமகனின் முயற்சி வெற்றி பெற வாழ்த்தி விட்டு விடை பெற்றோம்.

—பேட்டி: செல்லி, படம்: ஹமீது.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்ய வேண்டிய தேவை உண்டு. உங்களைப் போல அவர்களும் சராசரி மனிதர்கள் தான். நம் இளைய தலைமுறையும் எம்மைப்போல் அன்னியனின் நாடுகளில் வந்து, அன்னியனின் கீழ் பயந்தும் அடிமைப்பட்டும் வாழாது சுதந்திரத்தை நிலைநாட்டி நம் தமிழ் மண்ணிலே வாழ வழி வகுத்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளைப் பலப்படுத்தவே அவர்கள் உங்கள் முன்னிலையில் கையேந்தி வருகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இங்குள்ள கோயில்களிலும் கலை விழாக்களிலும், உங்கள் வீடுகளிலும் உங்களை அணுகுவார்கள். அவர்களின் மனதை புண்படுத்தாது உங்களால் இயன்ற உதவிகளை விடுதலைப் புலிகளுக்கு அளித்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்க விடுதலைப் புலிகள்,
வாழ்க தமிழ் மொழி,
வாழ்க தமிழ் மண்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம். (பிரித்தானியாக் கிளை)




## விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சிபற்றிய வீடியோ கசட்டுகள்

போராளிகளுக்கான ஆரம்ப பயிற்சிகள், போராளிகளின் இராணுவ அணிவகுப்பு, திடீர் தாக்குதல் ஒன்றின்போது போராளிகள் எவ்வாறு எதிர்தாக்குதலை மேற்கொள்வது எவ்வாறு பிரமாண்டமான தாக்குதல் ஒன்றை திட்டமிட்டு தாக்குவது, காட்டுப்புறநிலையில் கொரில்லாப்போராளி எவ்வாறு தன்னை உருமாற்றுவது என்பவற்றுடன் பயிற்சி முகாம்களில் போராளிகளுக்கு வழங்கப்படும் அரசியல் வகுப்புக்கள், போராளிகளின் பொழுதுபோக்கு அம்சங்களான விளையாட்டு, கலை நிகழ்ச்சி என்பவற்றை உள்ளடக்கிய கசட்டும், போர் நிறுத்தத்திற்கு எதிராக தமிழீழத்தில் பொதுமக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்கள், தமிழீழத்தில் உள்ள உள்ளூர் பயிற்சி முகாம்களில் நடைபெறும் பயிற்சிகள் என்பவற்றை உள்ளடக்கிய கசட்டும் எம்மிடம் உள்ளன. இக்கசட்டுகளை பார்க்க விரும்புபவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். சகல விபரங்களுக்கும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**SOLT (U.K.)**
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356

எமது வெளியீடான SOLT பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் "ஆசிரியர்குழு SOLT" என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழு நேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையினது சகல விதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புகளோ விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ, SOLT இற்கு அனுப்பும்போது, காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பிவைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ADDRESS:- SOLT, BM BOX 3694,
LONDON WC1 N3XX.



தமிழீழ ஆவணகாப்பகம்

https://tamileelamarchives.com/

# சிவனேஸ்வரன் சகோதரி கடிதம்

மெட்ரூஸ்
10-9-1985

கொலேகளே அஞ்சாது செய்யும் துரோகி உமாமகேஸ்வரனே!

உன்னேயே இறுதிவரை நம்பி உன்னேக் சந்திக்கவென வந்த சிவனேஸ்வரனேச் சுட்டுக் கொள்ளக் கூட உனக்கு முடியாமல் போய் விட்டதா? இவ்வளவு சித்திரவதை செய்கின்ற உனது கூட்டத்திற்கும் உனக்கும், இராணுவத்திற்கும் என்ன வித்தியாசமடா? இவ்வளவிற்கும் எனது தம்பி சிவனேஸ்வரன் உனக்கு என்ன துரோகமடா செய்தவன் உங்களுக்கெல்லாம் ஏனடா தமிழீழம். சிவனேஸ்வரனேத் தான் கொன்ருய். அவனேச் சேர்ந்த சோதி ராஜா, வசந்தன் இராஜன் அவர்கள் உனக்கு என்னடா செய்தார்கள்? பாவி அவர்களே யென்ருலும் சித்திரவதை செய்யாமல் சுட்டுக் கொன்றிருக்கலாமேடா பாவி இவ்வளவு பழியும் உன்னேச் சும்மா விடாதடா! சும்மா விடாதடா!

துரோகியே! மூன்று வருடங்களாக தனது வீட்டிலேயே உண்ணக் கூட முடியாத நிலேயில் வந்த உன்னே ஆதரித்து இராணுவத்தினருக்கு மட்டுமல்லாது உனது எதிரி பிரபாகரனுக்கும் பாதுகாத்து உன்னே இந்த நிலேக்கு ஆளாக்கிய குற்றத்திற்காகவா அந்தப் பிள்ளேக்கு ஒரு தோட்டா கூட உனக்கு செலவழிக்க முடியவில்லே. துரோகி உனக்கு இப்ப கொள்ளேயடித்த பணமெல்லாம் வந்தவுடன் அந்தப் பிள்ளே செய்த நன்றிகளேயெல்லாம் மறந்து விட்டிய எ தட்டிக் கேட்பதற்கு மற்றவர்கள் பயப்படுவது போல் நாங்களும் பயப்படுவோம் என்று நினேத்தாயோ பாவி என்றைக்கோ ஒரு நாள் எல்லோரும் சாவது நியாயம் தானே!

அதை உன் கையாலேயே என்னேயும் சேர்த்து செய். அந்தப் பாவமும் உன்னேச் சேரட்டும். இதற்கெல்லாம் பயந்தவனல்ல நான். கொள்ளேயடித்த பணமெல்லாம் இயக்கத்திற்கு என்று சொல்லி அடித்து, தமிழீழம் காப்பதாகக் கூறி, உனது பெயரில் விடுதியும், எஸ்ரேற்றும், ரெக்ஸ்ரைஸ்சும் வாங்கி விட்டால் நீ பெரியவன் என்று நினேத்து விட்டியா? பணம் வந்தவுடன் அவன் செய்த நன்றிகளேயெல்லாம் மறந்து விட்டியேடா பாவி.

என் குடும்பத்தையே அழிக்கத் துணிந்த பாவியே. எனது அண்ணன் உனக்கு அண்ணன் போல் தானே இருந்தார். தன்து சகோதரனேத் தேடி வந்த குற்றத்திற்காகவா நடுகடலில் தூக்கி வீசியெறிந்தாய் பாவி. 2வது பெண்ணின் வாழ்க்கையையும் அழித்து விதவையாக்கி விட்டியேடா?

அவன் இராணுவத்தினரால் சாக வேண்டுமென எண்ணி இலங்கைக்கு அனுப்பி வைத்தாய். அதிலும் அவன் தப்பி வந்து விட்டான். ஆனல் அவனது அத்தான் இராம. ராஜேஸ்வரன் இராணுவத்தினரால் கொலே செய்யப்பட்டார் பாவி அவனது சகோதரி இளம் வயதிலேயே விதவையாகி மூன்று பிள்ளேகளேயும் வளர்க்க முடியாமல் திண்டாடுகிருளே அதையாவது நீ உணர்ந்தியேடா பாவி இத்தனே உயிர்களேயும் கொலே செய்த அரக்கனே! உன்க்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் என்னடா வித்தியாசம். அவங்களோடு கூட உன்னே ஒப்பிட முடியாதடா பாவி! அவ்வளவு கீழ்தரமானவன் என்பதை இப்பதான்டா நாங்களே உணருகிருேம். தமிழ் மக்கள் உணருவதற்கு அதிக காலம் செல்லாது என்பதையும் மறந்து விடாதேயடா பாவி.

எவ்வளவு தூரத்தில் இருந்து எனது சகோதரனே அண்டத்து வைத்திருக்கிருய் என அறிந்து வந்தோனே துரோகி அத்நகிடையில் கொலே செய்ததும் மட்டுமல்லாது என்னே சந்திக்க கூட முடியாது என்று சொல்லி விட்டியேடா [illegible]ன்ருல் முடியும். உனக்கே மனசாட்சி இடங்கொடுக்கவில்லேயேடா பாவி. உன்னுடைய மனசாட்சி உன்னேக் கொன்றுகொண்டுதானடா இருக்கும். எல்லா மாடும் முட்டாது என்ரூ எண்ணுதே? இந்த மாடுகள் சும்மா விடாது என்பதை மட்டும் உனது மனதில் வைத்துக் கொள்ளடா பாவி.

நீதி கேட்டுப் போராடிய எனது தம்பிக்கு நீ உடனடியாக முடிவு கொடுத்துவிட்டாய். ஆனல் அவன் உயிர் உடல். தான் அழிந்ததே தவிர நீதி நிலேக்குமடாபாவி. அவனும் உன்னுடன் சேர்ந்த கொலே காரர்களான சங்கிலி என அழைக்கப்படும் கந்தசாமி வாமதேவன், வாசுதேவன் போல் கொலேகாரனாக மாறியிருந்தால் இப்ப பங்களா, கார், பணம் எல்லாவற்றிலும் மிதந்திருப்பான். கேவலம் உந்தப் பணத்திற்காக தன் நீதியை அவன் இழக்கவில்லேயேடா அந்தப் பெருமையையே எங்களுக்கு(எங்கள் குடும்பத்திற்குத்) தேடித்தந்துவிட்டானாடா. அதுவே போதும் எங்களுக்கு. உனது சுயநலமும், கபட நாடகமும் தற்பொழுது வெளி வந்து கொண்டிருப்பதை மறந்து விடாதே. உனது கபட நாடகம் நிலேப்பதற்கும் புகழுடன் சென்ற பிள்ளேயின் பெயர் நிலேப்பதற்கும் கனகாலமில்லேயடா.

துரோகியே ஏழு வருடங்களாக உன்னுடன் ஒரு கோப்பையில் உண்டு, ஒரு பாயில் படுத்த பிள்ளேயை உன் கையாலேயே அடித்து, அடித்து சித்திரவதை செய்து கொன்றியே அந்தப் பிள்ளேயையே அப்படிச் செய்த நீ தமிழீழம் கிடைத்தால் தமிழ் மக்களே சும்மா விடுவாயா! இதை ஒரு நாளும் அறிய மாட்டார்கள் என்ற எண்ணத்திலா அவன் சிங்கப்பூரில் லெபனனில் என்று கதை கட்டி விட்டாய்? அவனில்லேயென்றால் உனது கழகத்தின் பெயரே கெட்டுவிடும் என்று உனக்கே தெரிந்துவிட்டதே அவ்வளவுமே போதும். சீக்கிரமே உனது முகமூடியைக் கிளித்தெரிய வாய்ப்புக் கொடுத்திருக்கிறியே அதற்கு நன்றி. உனது துவக்கிற்கு (துப்பாக்கி) பயந்தவனல்லடா நான் வீர பரம்பரையில் உதித்தவர்கள் தானடா நாங்கள்.

கோழையே! நீ உண்மையான ஒரு வீரனுக இருந்தால் தனிமையில் அவனுடன் துப்பாக்கி சமர் புரிந்திருக்கலாம் இல்லேயா? உனக்கே அவனுடன் போர் புரியத் துணிவில்லேயடா. அப்படிப்பட்ட ஒரு வீரனே 10,15 பேர் சேர்ந்து தோளில் கை போட்டு கூட்டிக்கொண்டு போய் கட்டிப் போட்டுத்தானடா அடித்தியா. இதை நினைக்கவே உனக்கு-வெட்கமா இல்லேயாடா. உன்னேப் பார்த்து சிரிக்கப் போகுதே இப்ப நீ சிரிக்கருய்? நாளே உலகம் உன்னேப்பார்த்துச் சிரிக்கப்போகுது. அப்பொழுதுதான் உனது துரோகச்செயல்களே எண்ணி எப்படி நாங்கள் எல்லோரையும் இழந்து துடிக்கின்ருேமோ அதே மாதிரித் துடித்து துடித்து சாகவேண்டும். இதுவரை நீ 286 (இருநூற்று எண்பத்தாறு) கொலேகள் செய்திருக்கிருய். இனிமேலாவது கொலே வெறிபிடித்தவனே கொலேகளேச் செய்யாதே உனது மனேவியைப் போய் கேள் 10 மாதங்களும் எப்படி கஷ்டப்பட்டுப் பிள்ளேயைப் பெற்ருள். என்பதை பெற்ற தாய்மாரைக் கண்கலங்க வைக்காதேயடா படுபாவி. உன்னேப் பெற்ற தாயிடம் உனது கொலேகளேச் சொல்லிப்பாருடா பாவி அவள் எப்படித் துடிப்பாள் என்று அப்பத்தான் நீ உணருவாய்.

உனது எதிரி

தமிழீழ மக்களே உங்களுக்கு ஒரு செய்தியைத் தரவிரும்புகின்றேன்.

1) மானமுள்ள யாழ்பாணத்து தமிழ் பெண்கள் இவர்களே நம்பி வந்து பம்பாயில் உமாமகேஸ்வரனின் பெயரில் வாங்கப்பட்ட விடுதியில் விபச்சாரியாக மாற்றப்பட்டு அவஸ்தைப் படுகிருர்கள்.

2) பல இளேஞர்கள் போதை வஸ்து உமாமகேஸ்வரனின் கட்டாயத்தின் பேரில் கடத்தி சிஸ்றச்சாலேகளில் அடைக்கப் [illegible]க்கிருர்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com

The Island
Sunday Edition

Sunday 3rd, November, 1985 Registered in Sri Lanka as a Newspaper Vol. 5 No. 43 PRICE Rs. 3.50

# Two top PLOTE men executed?

V. I. S. Jayapalan, well known Tamil poet, and T. Sanniththiyar alias Vasanthan, former lieutenant of Uma Maheswaran, have both been executed in Tamil Nadu last week by the People's Liberation Organisation of Tamil Eelam (PLOTE), unconfirmed reports reaching Colombo from Madras said.

Jayapalan, a noted intellectual in Tamil circles, was a theoretician of PLOTE, who in recent times was known to have criticised the way Uma Maheswaran was running the organisation. Sanniththiyar was kidnapped some time ago by members of PLOTE. He led a group of dissident terrorists out of the organisation again accusing Uma Maheswaran of being autocratic and of mudalalism. The two of them have been killed, according to PLOTE, because they were the traitors to the cause.

Sanniththiyar and his breakaway faction published a pamphlet some time ago giving details of the high life Maheswaran is meant to be leading. According to the book, say Madras sources, Maheswaran is said to have invested large sums of money in several "safe" concerns and is now living well off the interest. His lack of interest in "the cause" is what led this group to breakaway.

Another leading Tamil expatriate in India who is meant to have recently criticised PLOTE is Dr. S. A, David, formerly of the Gandhyam Movement. His book is entitled "Muhunthan's Madness". "Muhunthan" is Maheswaran s nickname within the organisation. Dr. David was also kidnapped recently by PLOTE, though he was quickly released.

# I was in Sri Lanka—Nedumaran

P. Nedumaran, Gandhi Congress leader of Tamil Nadu who once threatened to sail to Sri Lanka with a flotila of boats, yesterday said in Madras that he had been in Sri Lanka for 20 days and visited many parts of the Northern and Eastern provinces. All India Radio said Nedumaran admitted being in Sri Lanka at a press conference held in Madras yesterday.

Nedumaran had alleged large scale killing of Tamils and claimed that as much as 2,000 Tamils had been killed after the declaration of the ceasefire.

The ceasefire is a contended ploy of the Sri Lankan government to strengthen its armed forces.

The Central Indian government, he said had realised that they could not make similar mistakes as the deportation of 3 Sri Lankan Tamils from India.

He said he was calling for a delegation of MPs from the Lok Sabha and Tamil Nadu to visit Sri Lanka and study the situation in Sri Lanka for themselves.

---

மறு பக்கத் தொடர்ச்சி:

3) மக்களே இதுவரையில் நானறியக் கூடியதாக நடந்த கொலைகள் 286தான். அதறகு மேலேயும் நடந்திருக்கலாம். தாய்மார்களே உங்கள் பிளளைகள் உயிருடன் இருக்கிருர்களா என்பதை தெண்டித்து அறியப் பார்க்கவும்.

தமிழ் மக்களே இவற்றையெல்லாம் நான் பகிரங்கமாக அறிவிப்பதற்குரிய காரணத்தை நீங்கள் அறியவேண்டாமா? எங்கள் குடும்பம் எல்லோரையும் இழந்து தவிப்பதைப்போல் இன்ஞெரு குடும்பமும் அதைப்போல் தள்ளப்படக் கூடாதே என்பதற்காகவே இதனை நான் பகிரங்கப்படுத்தினேன். இக்கடிதம் எழுதும் நானும் நாளை கடத்தப்படலாம், கொலை செய்யப்படலாம் என்பதையும் உங்களுக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இப்படிக்கு

சகோதரர்களை இழந்து துடிக்கும் சகோதரி

பிரதிகள்

1. இந்தியப் பிரதம மந்திரி
2. தமிழ்நாட்டு முதலமைச்சர்
3. உள்நாட்டு விவகார அமைச்சர்
4. திரு எஸ்.டி. சோமசுந்தரம்
5. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
6. ஈழ தேச விடுதலை முன்னணி
7. தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி
8. இலங்கைத் தொழிலாளர் கழகம்
9. தமிழ் இன்போமோன் செனிரர்
10. புரடோக்
11. தீப்பொறி ஆசிரியர்
12. ஈழ நாடு ஆசிரியர்
13. ஸ்ரீலங்கா வேக்குறாப்
ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலண்ட், U.S.A.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# இருட்டினில் குருட்டாட்டமா!

இன்று தமிழ் சமுதாயம் நமது சொந்த மண்ணிலேயே என்றுமே காணாத வகையில் தாங்க முடியாத, சகிக்க முடியாத இன்னல்களையும், துன்ப துயரங்களையும் பட்டு தமது வாழ் நாட்களைக் கழித்த வண்ணமாக இருக்கின்றனர். என்று இந்த இருண்ட வாழ்க்கை முடிந்து, ஓர் ஒளிமயமான வாழ்க்கை வாழ்வோம் என காடுகளிலும், இருண்ட பங்களாக்களிலும், அகதிகள் முகாங்களிலும், தங்கள் வாழ் நாட்களை, நரக வாழ்க்கையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த துன்பமான, சோகமான, இருண்ட வாழ்விலும் கூட நம்மிடையே எத்தனை பிளவுகள், பிரிவுகள். இந்தக் காலகட்டத்திலும் கூட நம்மிடையே சாதி வெறி, சமய வெறி, போன்ற கீழ்தரமான பாகுபாடுகள் ஓங்கி நிற்பதை எண்ணும் போது கவலைப்பட வேண்டியவர்களாகவே உள்ளோம்.

முழுத் தமிழ் சமுதாயமுமே பாதிக்கப்பட்டு வாழ்க்கையே இருண்டதாகி வாழ்வா சாவா? என நாட்களை நகர்த்தும் வேளையிலும் கூட, கண்ணிருந்தும் குருடர்களைப் போன்றும், சிந்திக்கும் ஆற்றலிருந்தும் மூடர்களைப் போன்றும் இன்னமும் நாம் வாழத்தான் வேண்டுமா? செய்யும் தொழில்களாலே பிரிக்கப்பட்ட சாதி வெறி இன்னமும் நம்மிடையே ஊசலாடுவதைப் பார்த்து நாம் வெட்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இன்றைய கால கட்டத்திலே தொழில்கள் ஒவ்வொன்றும், ஒன்றையொன்று சார்ந்தவையாகவும், ஒவ்வொர்வருடைய அன்றாட வாழ்கையில் அத்தியவசியமானதாகவும் இணைந்துள்ளது.

கடந்த காலங்களில் அறியாமையினாலும், முதியோர்களினாலும், அரசியல் இலாபம் தேடி, வெறி பிடித்த அரசியல் வாதிகளினாலேயும், சாதி பிரிக்கப்பட்டும், திணிக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வந்தது. இதனால் ஏற்பட்ட மோதல்களும், கலகங்களும், இரத்தக் களரிகளும், ஏற்படுத்திய சோக வரலாறுகளும், இன்றும் நம் மனத்திரையை விட்டு அகலாதுள்ளது. சாதிப் பாகுபாட்டினால் நமது மண்ணில் பிரிந்த, பிரிக்கப்பட்டுள்ள நம் சமுதாயம், பிற நாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடியும், அரசியல் தஞ்சம் கோரியும், உயர் கல்வி நாடியும், வந்து இவ்விடம் செய்யும் தொழில்கள் தான் என்ன? சிந்தித்துப் பார் தமிழ் சமுதாயமே!

நமது சொந்த மண்ணிலே, தொழில் செய்து தம் நாளாந்த வாழ்கையைக் கொண்டு செலுத்துவதுடன், நமது பொருளாதார சுயதேவைகளையும், பூர்த்தி செய்யும் போது, அவர்கள் தாழ்ந்த சாதியினர் என ஒதிக்கியவர்கள், பிறநாடுகளுக்குச் சென்று அதே வேலைகளையும், அதிலும் தரம் குறைவான வேலைகளையும் செய்து அன்னியரின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தும், அன்னிய நாட்டைப் பொருளாதார ரீதியில் உயர்வடையவும் செய்யும் இவர்கள் எந்த வர்க்கத்தினுள், எந்தச் சாதியினுள் அடங்குவர்? சிந்தித்துப் பார் தமிழ் சமுதாயமே....!

நமது மண்ணுக்காக, நமது பொருளாதாரத்திற்காக வெய்யிலிலும், மழையிலும், நீரிலும், நெருப்பிலும், தோய்ந்தும், கருகியும் ஒரு சிறிய குடிசையிலே தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கும் அந்த தியாக உள்ளங்களுக்கு நீ கொடுக்கும் அந்தஸ்தை நினைத்துப்பார் தமிழ் சமுதாயமே! தாழ்ந்த சாதி, தீண்டாச் சாதி என நீ பிரித்துச் செய்த கொடுமைகள் எத்தனை? மூடிய ஆலயங்கள், கோவில்கள், தால் நிலைய்ங்கள் தான் எத்தனை?

ஆனால் இன்று உரிமை இழந்தவர்கள், உடமை இழந்தவர்கள் போர்வைக்குள் அகதிகளாக்கப்பட்டு, இன்று நீ பிரித்தவர்களுடனேயே ஒன்றித்து முகாமில் இருப்பதையாவது நினைத்துப் பார். உன் முன்னையோர் சாதி வெறி பிடித்து அலைந்த போதிலும் சுடு காட்டில் ஒன்றித்து வெந்தார்கள் எனவே அவர்கள் சுடு காட்டில் தான் ஒன்றித்தார்களாயின் நீ இன்று யாவும் இழந்து அகதியாக்கப் பட்ட நிலையில் நீ ஒதுக்கிய சமுதாயத்துடனேயே ஒன்றித்தாயானால், அகதிகள் முகாம் உன் போன்றவர்க்கு சுடுகாடா? இன்னமும் தான் உன்னால் சிந்திக்க முடியவில்லையா....?

நமது சொந்த மண்ணிலே பரவிய இந்நோய், வெளி நாடுகளிலும் இடம் பெயர்ந்துள்ளதை எண்ணும் போது நம் சமுகத்தின் இவ்வாறான இழிந்த பண்புகளினால் தான் நம் இனத்திற்கு இவ்வளவு அழிவோ என எண்ணத் தோன்றுகிறது. அரசியல் புகலிடம் தேடி தஞ்சம் புகுந்த நாடுகளில் கூட, தாம் வதியும் முகாங்களில் தாம் சார்ந்த சாதியின் பெருமையை நிலைநாட்டுகின்றனராம் ஒரு சாரார். வேடிக்கையும், வேதனையும் கலந்த இச் செயல் நம் நிலைக்குத் தேவை தானா? தாம் வேலை செய்யும் தொழில் நிறுவனங்களிலே தாம் சார்ந்தவர்களை அதிகமாக அமர்த்தி, சாதி வெறியினால் பிறரை இம்சித்தும், வஞ்சித்தும் வரும் நம் கூட்டங்கள் சிலவும் அன்னிய நாடுகளில் தங்கள் அற்ப புத்திகளை காட்டி பெருமை தேடிக் கொள்கின்றனராம்.

இருண்ட நம் இன வரலாற்றிலே கண்ணிருந்தும் குருடர்களைப் போன்று இருட்டினில் குருட்டாட்டம் ஆடும் நம் இனத்தினரைப் பற்றி சிந்தித்துப் பார் தமிழ் சமுதாயமே! கடந்த காலப் பிரிவுகளின், நம் முன்னையோர் நம்மைப் பிரித்த தவறான பிளவுகளின், நம்மைப் பிரித்து வயிறு வளர்த்த அரசியல் வாதிகளின் போலிக் காரணங்களின், உண்மை நிலையினை சிந்தித்துப் பார் சமுதாயமே!

மலருகின்ற தமிழீழத்திலே இவ்வாறான பாகுபாடுகள் ஏற்றத் தாழ்வுகள், இல்லாத சுதந்திர தமிழீழமாக உதயமாகும் என்பது உறுதியாகும். இதனையே பல அன்பு உள்ளங்களும் எதிர்பார்க்கின்றன. அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் வெற்றிகரமாக அமைவதும் மக்களாகிய நம் அனைவரையும் சார்ந்ததாகும். நாம் ஒவ்வொர்வரும், ஒவ்வொர்வரையும் சகோதரத்துவத்துடனேயும், சிநேக மனப்பான்மையுடனேயும் நோக்கும் போது, நம்மிடையே புகுத்தப்பட்ட சாதிப் பேதமும், திணிக்கப்பட்ட பாகுபாடுகளும் மறைந்து, நாம் அனைவரும் பல சோதனைகள் வேதனைகளுக்கு மத்தியில் பெறும் தமிழீழத்தில் சாதி மத பேதங்களின்றி நாம் சுதந்திரப் பறவைகளாகவும், பொருளாதார ரீதியில் உயர்ந்தும் உலகிற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் வாழ்வோம் என்பது உறுதியாகும்.

"சாதிகள் ஒழியட்டும்-இங்கு
சாபங்கள் நீங்கட்டும்
தமிழீழம் மலரட்டும்-எங்கும்
சமத்துவம் நிலைக்கட்டும்"

"சாதிப்பிரச்சனைக்கு சாவு மணியடிக்கப் புறப்பட்டு வீரமரணமடைந்த விடுதலைப் புலி ஸ்ரீபன் ஆனந்தராஜனை நினைவு கூருவோம்."

---

எமது சமூகத்தைப் பிளவுபடுத்தும் சாதிப் பிரச்சினைகளும் புலிகளால் அவ்வப்போது தீர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, நாரந்தனை என்ற இடத்தில் இரு சமூகத்தார்க்கிடையே ஏற்பட்ட சிக்கலில், சிங்களப் பொலிஸ் வசதி மிகுந்த ஒரு சாராருக்கு சாதகமாக நடந்து கொண்டது. சிங்களப் பொலிசார் அப்பாவி சமூகத்தினரை மிதித்துக் கொண்டிருந்த வேளையில், அனலைதீவைச் சேர்ந்த விடுதலைப்புலி வீரன் ஸ்ரீபன் ஆனந்தராஜா ஒரு பொலிஸ் அதிகாரி மீது பாய்ந்து கைத்துப்பாக்கியைப் பறித்து, ஏனைய பொலிசை சுட்டுத்தள்ளினன். எதிரிகளிடம் பிடிபட விரும்பாத அவனும், அங்கேயே சயனைட் அருந்தி வீரமரணமடைந்தான். அத்துடன் இரு சமூகத்தவருக்கும் இடையில் எழுந்த பிரச்சினையும் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

## விடுதலைப்போராட்டத்தில் புதிய திருப்பம்! விடுதலை அமைப்புகள் ஒன்றுபட்டன!!

அண்மையில் தமிழீழவிடுதலைப்புலிகளும், ஈழத்தேசிய விடுதலைமுன்னணியும் இணைந்து கொண்டமை யாவரும் அறிந்ததே. நான்கு இயக்கத்தலைவர்களாலும் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட ஒற்றுமைக்கான உடன்படிக்கையில் ஐந்து அடிப்படைத் தீர்மானங்களில் ஒற்றுமைப்பட்டு செயற்படுவதென தெரிவித்திருந்தனர். அதேவேளை எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்து கூட்டாக முடிவெடுப்பதெனவும் தீர்மானித்தனர்.

எனினும், கூட்டாக பிரச்சாரங்களை மேற்கொள்வது பற்றியோ, அல்லது ஒருமித்த இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியோ, அல்லது கூட்டாக நிதி சேகரிப்பது பற்றியோ ஒற்றுமையில் இணைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இன்றுவரை எந்தவொரு தீர்மானத்திற்கும் வரவில்லை. முக்கியமாக பின்வரும் விடயங்களில்:

ஒன்று: தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கப்பிரச்சாரம், நிதிசேகரிப்பு ஆகியவற்றில் தொடர்ந்தும் தனித்துவமாகவே இயங்கி வருவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கும், பொது நிதிக்கான எந்த ஒரு வங்கிக் கணக்கும் இல்லையென்பதையும்,

இரண்டு: இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் ஓர் அங்கமல்ல. தமிழீழ விடுதலைப்புலிகள் ஈழத்தேசிய விடுதலை முன்னணியோடு சேர்ந்து கொண்டதாகவோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து கொண்டதாகவோ கருதப்பட முடியாததுடன், இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இணைந்துகொண்டுள்ளதென்பதையும்,

மூன்று: தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கெண்ட எல்லா இராணுவ நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளால் தனித்தே மேற்கொள்ளப் பட்டதுடன், ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடனோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு அமைப்புடனோ ஒருமுகப்பட்டோ அல்லது ஒன்று சேர்ந்தோ மேற்கொள்ள வில்லையென்பதையும் தமிழீழ மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கை.

************************************

# தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

## VOICE OF LIBERATION TIGERS

தமிழீழம் வானொலி— அலை வரிசை சிற்றலை 49 இல் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

தொலைக்காட்சி— வடமாகாணத்தில் (முன்னறிவித்தவடன்)

நெதர்லாந்து— தொலைபேசிச் சேவை
1) (070)466.121.- டென்காக் தமிழில் 24 மணி நேரமும்.
2) சனி, ஞாயிறு காலை 9மணியிலிருந்து மாலை 9மணிவரை டச்சு, ஆங்கிலம்.

வானொலி— ஞாயிறு இரு தடவைகள் மாலை 12மணிமுதல் 1மணி வரை. மாலை 9மணிமுதல் 10 மணி வரை.

பிரான்ஸ் — தொலைபேசிச் சேவை
1)239.58.67-பாரிஸ் 24 மணிநேரமும்.

வானொலி— ஞாயிறு, வியாழன் ஆகிய இரு நாட்களில் மாலை 7மணி முதல் 8மணி வரை. அலைவரிசை 102.7

நோர்வே— தொலைபேசிச்சேவை-இரு நகரங்களில்
1) (2)38.44.58- ஒஸ்லோ
2) (5)31.27.98- பேர்கன் 24மணி நேரமும்.

லண்டன்— தொலைபேசிச் சேவை
1) 475-0543 24 மணி நேரமும்.

ஜேர்மனி— தொலைபேசிச் சேவை
(30)396.74.77-பேர்லின்

கனடா— தொலைபேசிச் சேவை
(514)25542-04 மொன்றியல்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



**குருதியில் மிதக்கும் தமிழீழம்**
**கூடிவாழ முடியுமா சிங்களவர்களுடன்!**

## ஏய்..நீ..சிங்களமே!

அழித்தாய்...அழித்தாய்...சிங்களமே! – எமை
அடித்தாய்...உதைத்தாய்...சிங்களமே!
தமிழ்த்தாய்...நெஞ்சிற்...தீயினை வைத்தாய்!
தகர்த்தாய்...தமிழர்...உரிமைகள் அனைத்தும்!
பழித்தாய்...இழித்தாய்...ஒறுத்தாய்...வெறுத்தாய்...
மறுத்தாய்...மறைத்தாய்...மனித்தாய் நிலத்தில்...
மிதித்தாய்...எம்மைத்...தூசாய் .மதித்தாய்!
விதித்தாய்...எமக்கு...அழிவென விதித்தாய்!

உனக்கோர் விதியினை...நீயே கணித்தாய்!
இனக் கொலை வெறிக்குள்...இனத்தையே பணித்தாய்!
கனித் தமிழ் மாதரின்...கற்பினைப் பறித்தாய்!
காவலர் போர்வையில்...உயிர்களைக் குடித்தாய்!
தனித்தாய்...தரணியிற்...பல தலை முறைக்கும்...
தரித்திரம்...தேடியே..தாழ்வினைப் பிடித்தாய்!
படித்தாயோ நீ...சரித்திரப் பாடங்கள்...
சரியுமுன்...கொடுமுடி...சாயுமுன் தலையே!

## விடுதலை... பிறப்புரிமை

விட்டிற் பூச்சிக ளென்றே...நினைத்தாய்...
வெறிகொள் சிங்களமே!
கட்டுப் பொசுக்கித்...தீர்த்திட முனைந்தாய்...
அறிவாய்...எம் பலமே!

தட்டிக் கேட்டிட...மனிதர்களில்லை...
தர்மமும்...செத்த...தென் றே...நினைத்தாய்
குட்டிடக் குட்டிடக்...குனிபவரென்றே...
கொடுமையை எம்முன் ஏவி விட்டாய்!

எதுவிலை கொடுத்தும்...விடுதலை யென்றே...
எழுந்தது...எங்கள் இளைஞர்படை...
விடுதலை... விடுதலை... விடுதலையென்றே...
வளர்ந்தனர்... இதுதான் எமதுவிடை...

விடுதலை... எமது பிறப்புரிமை... அதைத்
தடுத்திட... உனக்கு... ஏதுரிமை?
விடுதலை...எடுத்திடத் துணிந்து விட்டோம்!...உன்
படுகொலை தடுத்திட...எழுந்து விட்டோம்!

–; பங்கையமலன் :–

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (P.L.O.T) காட்டுமிராண்டித் தர்பார்.

தமிழீழ விடுதலைக்கு போராடுகின்றோம் என்ற கோசமிட்டு கொலைகளிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டுவரும் PLOT என்ற இயக்கம் எமது ஊரிலும் தனது கைவரிசைகளைக் காட்ட தொடங்கியுள்ளது. சுழிபுரத்தில் 6 இளைஞர்களை கொலை செய்த இவர்கள் அதே பாணியில் எமது ஊரில் உள்ள இன்னுமோர் இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்களை கொலை செய்ய முயற்சித்தார்கள். இதனால் அவ்வியக்கத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் இடையில் பெரும் கைகலப்பு ஏற்பட்டது. இதில் துப்பாக்கி வேட்டுக்கள், கைக்குண்டுகள், குண்டாந்தடிப் பிரயோகங்கள் ஆகியவையும் நடைபெற்றன. இதில் இரு பகுதி இளைஞர்களும் மிகவும் காயமடைந்தார்கள்.

இவற்றைப் பார்க்க சகிக்காது இதனை நிறுத்துவதற்கு ஊர்வலமாகச் சென்ற எம்மை இந்த PLOT உறுப்பினர்கள் சிறீலங்கா இராணுவம் தாக்குவதிலும் விட மிகவும் காடைத்தனமாக தாக்கினார்கள். எம்மை நோக்கி கைக்குண்டுகளையும் எறிந்தார்கள். இதனால் இவர்களை நாம் அடித்துத் துரத்தவேண்டிய தர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

இது வரை காலமும் தமிழீழ விடுதலைக்கு எந்த ஒரு போராட்டத்தையும் நடத்தாது எம்மிடம் இருந்து சாப்பாட்டு பார்சல்களையும், பணத்தையும் வாங்கி ஏப்பம் விடும் இவர்கள் விடுதலைக்கு போராடுபவர்களா அல்லது விடுதலைப் போராளிகளை அழிப்பவர்களா?

இவர்கள்தான் மனியம் தோட்டத்தில் பெண்களை கொலை செய்து புதைக்கும் காரணகர்த்தாக்கள் என்று நாம் அறிகின்றோம். அத்துடன் தங்கள் இயக்கத்தில் உள்ள நல்ல பல இளைஞர்களையும் இவர்கள் கொலை செய்து வருவதாக அறியப்படுகின்றது.

தமது வாழ்வெளியில் மக்கள் போராட்டம், ஒற்றுமை என்ற கூச்சலிடும் இவர்கள் இன்று எம்மீதே கைக்குண்டுகள் எறியத் தொடங்கிவிட்டார்கள், இவர்களா எமக்கு விடுதலை பெற்றுத்தரப்போகிறார்கள். ஏனைய இயக்கங்கள் இணைந்திருக்க இவர்கள் தனித்திருந்து இப்படியான காடைத்தனங்களில் ஈடுபடுவதை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே ஏனைய இயக்கங்கள் யாவும் இணைந்து இதற்கு ஓர் பரிகாரம் காண வேண்டுமெனக் கோருகின்றோம்.

ஊரிகாவற்றுறை பொதுமக்கள்


தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சியனையும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தைப் பற்றிய வாக்கியங்களையும் பதித்த பனியன்கள் விநியோகத்திற்குள்ளன. முழு விபரங்களுக்கும் SOLT உடன் தொடர்பு கொள்ளவும்.

SOLT (U.K.)

**SOLT (U.K.)**
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356


(நன்றி:- களத்தில், வீரவேங்கை, சண்டே, தினமணி, மக்கள்குரல், மறுமலர்ச்சி, சுதேசமித்திரன், விடுதலை, எதிரொலி, தினகரன், தினத்தந்தி, திலசரி, அலை, தீக்கதிர், மாலைமலர், மாலைமுரசு, தினமலர், தினஇதழ்)

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/




# தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

## VOICE OF LIBERATION TIGERS

தமிழீழத்தில் நடைபெறும் சம்பவங்கள்
பற்றிய வர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு
"தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்"
செய்திச் சேவையுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. **01-475 0543**

SOLT (U.K.)
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 8356




SOLT (U.K.)

# தமிழீழ மக்களே!

**இனவாத சிறிலங்கா அரசைச்**
**சிதைக்கும் விடுதலைப் புலிகளின்**
**கைகளைப் பலப்படுத்த**
**விடுதலைப் புலிகளுடன் இணைந்து**
**போராடுங்கள்.**



TAMIL EELAM

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

PRINTED PUBLISHED AND ISSUED BY SOLT, BM BOX 3694, LONDON WC1N 3XX.
(For private circulation only)

தமிழீழ ஆவணக்காப்பகம்